## துரத்தும் நீதி மன்றங்கள்





## குரைத்தவை கடித்ததில்லை



நவம்பர் 6- நவம்பர் 12, 2011 November 6 - November 12, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்




# வெண்ணெய் திரளும்போது தாழியை உடைக்கும் முயற்சி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணெய் திரளும் போது தாழியை உடைக்கும் முயற்சி!

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைப்பது என்றொரு பழமொழி தமிழில் உண்டு. ஒரு நல்ல காரியம் கூடி வரும் வேளையில் அதைக் குழப்பியடித்து நிறைவேறாமல் செய்யும் வேலைகளை முயற்சிக்கு இப்பழமொழி பாவிக்கப்படுகிறது.

இப்படியான சந்தர்ப்பங்களைத் தமிழினம் பல முறை எமது நாட்டில் சந்தித்துள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகள் சாதகமான திசையில் செல்லும் போதெல்லாம் இப்படியான துரோக நடவடிக்கைகள் மேற்கொண்டு குழப்பியடித்த வரலாறு தமிழ் மக்களுக்கு அப்படி ஒன்றும் புதிதல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இதில் இலங்கை அரசு தீர்வை எட்டுவதற்கான ஆர்வத்துடன் ஈடுபடாவிட்டாலும் கூட இன்றைய சர்வதேச சூழல் தமிழ் மக்களுக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தி வருகின்றது.

தமிழக மக்களும் தமிழக முதல்வர் செல்வி.ஜெயலலிதா அவர்களும் எடுக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆதரவான நிலைப்பாடு இந்திய மத்திய அரசை ஏதாவது இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது. அமெரிக்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து நடத்திவரும் பேச்சுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளன. இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக அவுஸ்ரேலியாவில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் எழுப்பப்படும் பிரச்சனைகள் இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுத்துள்ளன. அதிலும் அடுத்த பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்படக் கூடாது எனவும் அப்படி நடத்தினால் நான் அதில் பங்குகொள்ளப் போவதில்லையெனவும் கனடா கொடுத்து வரும் அழுத்தங்கள் இலங்கை அரசைத் திக்குமுக்காட வைத்துள்ளன.

■ சந்திரசேகர ஆசாத்



தேசிய அளவில் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி வரும் பேராதரவும், தென்னிலங்கையில் மனோ கணேசனுக்குக் கிடைத்த ஆதரவும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் தொடர்பாக ஒரு காத்திரமான [illegible] வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கை அரசு எவ்வளவுதான் இனப்பிரச்சினைத் தீர்வை இழுத்தடிக்கவும், திசை திருப்பி மழுங்கடிக்கவும் முயன்றாலும் தேசிய சர்வதேசிய நிலைமைகள் தமிழ் மக்களுக்குச் சாதகமாகவே அமைந்துள்ளன.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட சில கருத்துக்கள் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைப்பது போன்ற வகையிலே அமைந்துள்ளமை கவலைக்குரியதும் விமர்சனத்துக்குரியதுமாக வெளிப்பட்டிருப்பதை இலேசுவில் புறக்கணித்து விட முடியாது.

அவர் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா சென்று அங்கு பேச்சுக்களில் ஈடுபடுவதில் எவ்வித பலனுமில்லையெனவும் இது பிரச்சனையை மேலும் சிக்கலாக்கும் எனவும் தெரிவித்திருந்தார். மேலும் காணி, பொலிஸ் அதிகாரம் அற்ற வகையில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதைத் தென்னிலங்கை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்ட பின்பு தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரே சக்தி தமிழ் மக்களின் ஐக்கியம்தான். அதை தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு திரும்பத் திரும்ப வழங்கி வரும் பேராதரவு மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். அந்த ஐக்கியமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமெரிக்கா அழைத்துப் பேசும் நிலைமையை உருவாக்கியுள்ளது. இலங்கை அரசு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், வடக்குக் கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொண்டு அம்மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி வருவதாகவும் சர்வதேச அரங்குகளிலும் பல நாடுகளுடன் தனித்தனியாகவும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு பிரசாரங்களை ஒருபுறம் மேற்கொண்டவாறு மறுபுறத்தில் நில அபகரிப்பு, தமிழ் பிரதேசங்களை இராணுவமயப்படுத்தல் போன்ற விடயங்களில் முனைப்புக் காட்டி வருகிறது.

அதாவது ஒரு வெளிப் பிரசாரம் மூலம் இலங்கை அரசு தனது ஒடுக்கு முறைகளை மறைத்து தமிழ் மக்கள் மீது அக்கறை காட்டுவது போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி வருகிறது. புலம்பெயர் நாடுகளில் இயங்கும் தமிழ் அமைப்புக்களும், சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும் உண்மைகளை வெளிக்கொண்டு வரும் போதெல்லாம் அவர்கள் புலிகளிடம் பணம் பெற்று இலங்கை அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டு வருகின்றனர் என அரசு கூறி வந்தது.

இப்படியான பொய்களை முறியடித்து உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் அரியதொரு வாய்ப்பாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெரும்பான்மையான தமிழ் மக்களால் நாடாளுமன்றத்திற்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்களின் கூற்றுக்கு அங்கீகாரம் உண்டு. இப்படியான நிலையில் எவரொருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணத்தை எதிர்க்கிறாரோ அவர் அரசின் பொய்களை நியாயப்படுத்த முயற்சிக்கிறார் என்பதும், தமிழ் மக்கள் தொடர்பான விரோதமான நிலைப்பாட்டை எடுக்கிறார் என்பதும் தெளிவாகவே புரிந்து கொள்ளக் கூடியதாகும்.

அமைச்சரின் அடுத்த பொலிஸ், காணி அதிகாரமற்ற 13வது திருத்தச் சட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்து எவ்வளவு ஆபத்தானது என்பதைத் தமிழ் மக்கள் தெளிவாகவே புரிந்து கொள்வார்கள்.

**இன்றோ நிலைமை மேலும் மோசமடைந்து விட்டது. ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வடக்குக் கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. 18வது திருத்தச் சட்டமூலம் பொலிஸ், பொது நிர்வாக அதி காரங்களும் மாகாண சபையிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. உள்ளூராட்சி சபை சட்டத்திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு உள்ளூராட்சி சபைகளுக்குள்ள பிரதான உரிமையும் பறிக்கப்படுகிறது.**

13வது திருத்தச் சட்டத்தின்படி கூட ஆளுநரின் அனுமதியின்றி எந்த ஒரு சட்டத்தையோ அல்லது ஒரு திட்டத்தையோ நிறைவேற்ற முடியாது. ஆளுநர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒரு அரச பணியாளர். அவரின் எந்த ஒரு நடவடிக்கையும் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு ஏற்றவகையிலேயே அமையும். இப்படியான ஒருநிலையில் 13வது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக மாகாண சபையால் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியுமா? அது மட்டுமின்றி தான் விரும்பும் சந்தர்ப்பத்தில் மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. சில மாதங்களுக்கு முன் கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றங்களை மாகாண சபையுடன் எவ்வித கலந்துரையாடல்களையும் நடத்தாமலே ஜனாதிபதி ஒரு அறிவித்தல் மூலம் இரத்துச் செய்தமை நல்ல ஒரு உதாரணமாகும். மாகாண சபையின் அதிகாரம் எப்படி எல்லைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ளமுடியும். இதன் காரணமாகவே 13வது திருத்தச் சட்டம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வு அல்ல எனக் கூறி தமிழ் மக்கள் அதை நிராகரித்தனர்.

இன்றோ நிலைமை மேலும் மோசமடைந்து விட்டது. ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வடக்குக் கிழக்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டது. 18வது திருத்தச் சட்ட மூலம் பொலிஸ், பொது நிர்வாக அதிகாரங்களும் மாகாண சபையிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. உள்ளூராட்சி சபை சட்டத்திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு உள்ளூராட்சி சபைகளுக்குள்ள பிரதான உரிமையும் பறிக்கப்படுகிறது.

இப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காணி பற்றிய அதிகாரத்தையும் கைவிடும்படி கோருகிறார். எல்லா அதிகாரங்களும் பறிக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து சபையாக மாகாண சபையை மாற்றி அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கோருவது உண்மையிலேயே தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் உச்சக்கட்டத் துரோகமாகும்.

இன்று இனப்பிரச்சினைக்கு ஒரு நியாய பூர்வமான தீர்வுகாணப்பட வேண்டும் என சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தங்களையும் இந்தியாவின் அபிலாசைகளையும் மழுங்கடிக்கும் வகையில் சகல அதிகாரங்களும் பறிக்கப்பட்ட 13வது திருத்தத்தை அரசு முன்வைக்க முனைகிறது. அதாவது ஒரு போலியான ஏமாற்றுத் தீர்வை தமிழ் மக்கள் மீது திணிக்க விரும்புகிறது. இதை எக்காரணம் கொண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதை மனதிற் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் இலாபத்துக்காக இனப்பிரச்சினைத் தீர்வை விரும்பவில்லை என அமைச்சர் ஒரு பிரசாரப் போக்கை அவிழ்த்து விட்டிருக்கிறார். ஈ.பி.டி.பியினர் யாழ்ப்பாணத்தில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கோஷத்தை முன்வைத்தே தேர்தலில் போட்டியிட்டு 3 ஆசனங்களைப் பெற்றவர்கள். அவ்வெற்றியே அவர் அமைச்சராவதற்கான வாய்ப்பை வழங்கியது.

எனவே தன்னை நாடாளுமன்றம் அனுப்பிய மக்களுக்காக தான் முன்வைத்த கொள்கையின் அடிப்படையில் குரல் கொடுக்க வேண்டிய கடப்பாடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உண்டு. ஆனால் அவர் அரசின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் தமிழ் மக்களுக்கு விரோதமான நிலைப்பாட்டை எடுப்பதை மக்களால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

அதிலும் நியாய பூர்வமான வகையில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணக் கூடிய சர்வதேச சூழல் உருவாகிவரும் வேளையில் அவர் இப்படியான கருத்துகளை வெளியிட்டு குழப்பியடிக்க முயல்வது வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைக்கும் ஒரு மோசமான செயலாகும்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டு அமைச்சரவையில் தமிழ் மக்களின் குரலாக ஒலிக்க வேண்டுமேயொழிய, அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் ஒருவராக விளங்கக் கூடாது. அப்படிச் செய்வது நிச்சயமாக தன்னைத் தெரிவு செய்த மக்களின் அபிலாசைகளை நிராகரிக்கும் ஒரு செயற்பாடாகவே அமையும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தினது முடிவுகளையும் மரணம் தீர்மானிக்கும் என்ற விதியிலிருந்து மனித வாழ்வும் தன்னை விடுவித்துக் கொள்வதில்லை. இறப்பதற்கென்றே உயிர்கள் பிரசவமாகின்றன. சில சவமாகியே பிரசவமாகின்றன. பிறக்கச் செய்யப்பட்டவைகள் மூப்பெய்தி சாவதற்கு முன்னரே பல வடிவங்களலான மரணங்கள் அவற்றைத் துரத்தி அலைக்கழிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் தம் விருப்பப்படி உயிர்களை எடுத்துக் கொள்கின்றது. இந்த அலைக்கழிப்புக்களிளெல்லாம் தப்பிய மானுடம் மட்டும் தன்னை நிலை நிறுவிக் கொள்கின்றது. ஆயினும் அதற்கும் மரணம் நிச்சயம் என்பது முன் கூட்டியே தெரிந்திருக்கின்றது. தன் இருப்பிற்காக, வரலாற்றில் மையங்கொள்ளலுக்காக அறிவிக்கப்பட்டிருக்கும் மரணத்தை தூரத் தள்ளிவைக்க முயற்சிக்கின்றது மனிதம். அதற்காகப் போராடுதல் மனித வாழ்க்கை நெறியாகவும் மாறி விடுகின்றது. அவ்வழியில் தனி மனித வாழ்க்கைக்கான பேராட்டம் சமூக வெளிக்குள் பிரகாசமாகின்றபோது பாதிக்கப்படுபவர்கள் அதிகம் அதிகமாய் உற்பத்தியாகின்றனர். பலமுள்ளவர்கள், பலமற்றவர்கள் எனும் பிரதான பிரிப்புக்களின் அடிப்படையில் குழுமங்கள் அடையாளமாகின்றன. எப்போதும் பலமுள்ளவர்களின் வாழ்தல் பலமற்றவர்களை சுரண்டுவதிலேயே முடிந்து விடுகின்றது. இந்தச் சுரண்டலுக்கான போராட்டம் தான இரு அணியாரினதும் பெரும்பாக மரணங்களின் பட்டறையாக இருக்கின்றது. இரு தரப்பிலும் உருவாகும் போராட்ட முன்னெடுப்பாளர்கள் மரணத்தை தூரத்தள்ளி வைக்கும் சக்தி படைத்தவர்களாகத் தம்மைசிருஷ்டித்துக் கொள்கின்றனர். தம் உயிர் வழ்தலுக்காக பேராட்டத் தலைவன் என்ற அடையாளத்தை தீவிரமாகப் பயன்படுத்துகின்றனர். அதற்காக எத்தனை ஆயரம் உயிர்களும் மரணத்தை தழுவலாம் எனும் மறைமுக சித்தாந்தம் இப் பெருந்தலைவர்களின் வாழ்க்கை முழுதும் இழையோடுகின்றது. அவர்களைச் சூழ உருவாகியிருக்கும் பேரொளியும் பலியாகும் உயிரிகளுக்கு கிடைக்க வேண்டிய யதார்த்த உரையை கேட்டுணர முடியாமல் செய்து விடுகின்றது. விடுதலை, சுதந்திரம், போராட்டம் எனும் உசுப்பு வார்த்தைகளால் உருவேற்றி ஏற்றியே பல உயிர்களை கெலைக்களங்களுக்கு அனுப்பும் சாத்தனாகும் தலைவர்கள் எப்போதும் காலத்தை உடைக்கும் வரலாற்றுப் பதிவுகளில் நிலை நின்றே வந்திருக்கின்றனர். அதுபோல் காலந்தோறும் இந்த தனிமனித இருப்பிற்கான உயிர் யாகங்களும் இடையறாமல் நடந்தேறிய வண்ணமே உள்ளன. தன் நிலவுகைக்காக விதம் விதமான வீர உச்சாடனங்களை அவர்கள் எப்போதும் போர்த்தியே வாழ்ந்திருக்கின்றனர்.

தமக்கு மரணம் பற்றிய பயம் துளியளவும் இல்லையென் பதையும் தாம் மரணித்தால் அது வீர மரணம் என்பதையும் அறிக்கைகளால் எழுதி வைத்து விட்டு வாழத்தொடங்குகின்றனர். ஆனால் அவர்களையும் மரணம் அணுகுகையில்......?

உலகம் முழுவதிலும் இதற்கு அதிக எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. அமெரிக்காவை எதிர்ப்ப தில் முன் நின்ற தலைவர்களா கத் தம்மைகாட் டிக் கொண்ட மூன்று அரபுலகத்தவர்களின் அடுத்தடுத்த மரணங்கள் இதற்கான அண்மைய எடுத்துக் காட்டுக்கள். வாழும் காலத்தில் பல விதங்களில் குரைத்தனர். உப்புச் சப்பற்ற அக்கு ரைப்பை நம்பி எத்தனை ஆயிரம் இளைஞர் களை மரணம் தொட்டது. யாருக்குமே அந்த மரணங்களின் எண்ணிக்கையும், பெறுமதியும் தெரியாது. ஆனால் இப்படியான தலைவர்களும் அப்பாவித்தனமான பலியாடுகளும் பெருகிக்கொண்டே போகின்றன.

மத்திய கிழக்கின் தனிக் காட்டுச் சிங்கமாக உலா வந்தவர் சதாம் ஹிசைன். ஈராக் எண்ணெய்வயல்களில ஊறும் பணம் இந்த மனிதரை உலகில் கெழுத்த தலைவராக்கியது. படுகொலைகள், ஆட்கடத்தல்கள், சிறுபான்மை இனங்கள் மீதான கட்டற்ற வன்முறைகள் எனபவற்றால் உலகறிந்த தலைவராகினார் சதாம். அத்தோடு நின்று விடாது எல்லை கடந்து ஈரானிலும் வளைகுடாவிலும் போரைத் தொடங்கி மத்திய கிழக்கின வல்லரசன் தான் என்பதை நிறுவ முயன்று தோற்றுப் போனார். அரபுத் தேசியம் எனும் மாயையைக் கட்டியெழுப்ப மதம் சார்ந்த அரசியலை பரவலாக முன்னெடுத்தார். தான் சார்ந்த இஸ்லாம் மதப்பிரிவான சன்னிப் பிரிவை முன்னிலைப்படுத்தி ஷியா பிரிவினரை பலியெடுத்தார்.இதற்காக எண்ணற்ற உயிர்கள் களப்பலியாகின. உலகை அச்சுறுத்தும் ஆயதங்களை ஈராக் வைத்திருக்கின்றது எனும் குற்றச்சாட்டை அமெரிக்கா முன்வைக்கினறபோதிளெல்லாம் அமெரிக்காவிற்கு எதிராக அதிகம் குரைத்தார். அமெரிக்கா தன மணணில் காலடி வைத்தால் அது அநத தேசத்தின அழிவைத் தேடும் தொடக்கம் எனவும் தான் உயிரோடு இருக்கும் வரை அது சாத்தியமாகாது எனவும் சத்தியம் செய்து வந்தார். இந்த வீராவேசங்கள் எத்தனையோ உயிர்களை தின்றன. கடைசியில் தன் சொந்த கிராமத்திலேயே வெளியில் வரமுடியாத நிலையில், பதுங்கு குழியொன்றினுள் இருந்து அமெரிக்கப் படைகளால் பிடிக்கப்பட்டார். அப்போது அவரிடம் சுயமாக இயங்கக் கூடிய தானியங்கி கைத்துப்பாக்கி ரவையேற்றம் செய்யப்பட்டபடி இருந்தது. ஆனால் ஏற்கனவே தன் படையினரிடம் சொன்ன தன்னைத் தானே சுட்டு மரணிக்கும் எண்ணம் இந்தத் தலைவருக்கு வரவில்லை. தன் எதிரியிடம் சரணடைந்தார். 'நான் ஈராக் அதிபர் சதாம் ஹிசைன். உங்களோடு சமரசம் செய்து கொள்ள விரும்புகின்றேன்'. ஒரு பெருந்தலைவர் சரணடையும் போது சொன்ன இறுதி வார்த்தைகள் இவை.

லிபியாவின் பல தசாப்த கால தலைவன் முகம்மர் கடாபி. ராணுவ புரட்சியொன்றின் உதவியோடு ஆட்சியைப பிடித்து ஆடாத ஆட்டமெல்லாம் போட்டார். இவரிடமும் படுகெலைகளுக்கும் ஆட்கடத்தல்களுக்குமபஞ்சமில்லை. நாடு கடந்து விமானக் குண்டு வெடிப்புத் தாக்குதல்களைக் கூட நடத்தி தன் வீரம் பேச வைத்தார். அள்ள அள்ளக் குறையாத எண்ணெய் வளம் இவரின் வாய்ச் சவடால்களுக்கு வாய்ப்பானது. அமெரிக்காவிற்கே சவால் விட்டு புதியதொரு அரபு இராச்சியத்தை நிறுவ முயற்சித்தார். மக்கள் மீது கட்டற்ற வன்முறைக் கட்டவிழ்ப்பை ஏதேச்சாதிகாரப் போக்கில் கட்டவிழ்த்தார். இன்னமும் பல மனிதப படுகொலைப் புதைகுழிகள் அங்கே மறைந்து கிடக்கின்றன. இவ்வாண்டு வீசிய மின்னல் வேக புரட்சி அலை லிபிய மக்களையும் தொற்றிக் கொள்ளவே கடாபியும் ஆட்டம் கண்டார். 2004 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க நண்பனாக மாறிய போதிலும் அரபுலகில் அமெரிக்காவிற்கு தேவைப்பட்ட ஆட்சி மாற்றம் இவரையும் கைவிட வைத்தது. புரட்சிப் படைகள் எங்கிருந்தோ எல்லாம் வந்து லிபியாவில் குவிந்தன. கடாபி நாற்பது வருடங்களின் பின்னர் ஓடத் தொடங்கினார். அந்த நேரத்தில் தான் அவரது பழைய கர்ஜிப்பு மறுபடியும் உதிர்ந்தது. நேட்டோ படைகள் தன் தேசத்தை ஒன்றும் செய்து விடமுடியாதெனவும், தான் ஒருபோ தும் தப்பிச் செல்லமாட்டேன் எனவும், அடைந்தால் வீர மரணமே தவிர சரணடைய மாட்டேன எனவும் கடைசி வரை அறிக்கை விட்டு வந்தார். சோர்ட் நகர வீதியின் கழிவு நீர் வாய்க்காலிலிருந்து நனைந்த கோழியாக போராளிகளிடம் பிடிபடும் போது இந்த வீரன் சொன்ன வார்த்தைகள், 'என்னைச் சுட வேண்டாம் என்னைச் சுட வேண்டாம்'! அவரிடமும் தங்கக் கைத்துப்பாக்கி இருந்தது.

இது போன்று தலைவர்களின் மரணங்கள் பற்றிய உதாரணங்கள் பலவுண்டு. நமக்கு அண்மைய உதாரணங்களும் சிலவேளைகளில் இருக்கலாம். இதிலிருந்து தெரிவதெல்லாம் ஒன்று தான். தலைவர்களுக்குச் சாகப் பயம். அவர்களால் உசுப் பேற்ற மட்டுமே முடியும்.

■ ஜெரா



# குரைத்தவை கடித்ததில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌதம புத்தரும் சிந்தனைத் தெளிவும்



■ நெடுந்தீவு மகேஷ்

## ■ தொலையா நினைவுகள்

தீவகக் கல்விப் பணிப்பாளராக இருந்த சின்னத்தம்பி மாஸ்ரர் தனக்குக் கிடைத்த பதவிகளில் சிறப்பாகச் செயலாற்றியவர். கொத்தணி அதிபராக அவர் மகாவித்தியாலயத்தில் பதவியேற்றிருந்த நாட்களில் கொத்தணிப் பாடசாலைகளின் நோக்கம் குலையாமல் கொத்தணிக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர்.

கிளிநொச்சியில் ஆரம்பித்து எங்கள் மகா வித்தியாலயத்தில் கடமையேற்றபோது என்னைக் கொத்தணிப் பாடசாலைகளின் உதவி ஆசிரியராக நியமித்திருந்தார். பாடசாலைகளின் தேவைகளை அறிந்து இணைந்து பாடசாலைகளின் முன்னேற்றத்தை வலுப்படுத்தும் வேலைகளை ஊக்குவித்தலே எனது அன்றைய பணி. ஆனால் அப்பணி மிகவும் கடினமானதாகவும் பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகள் முரண்பாடுகள் காரணமாக ஆக்கிப்படுத்தலும் ஊக்கப்படுத்தலும் பல வேளைகளில் சிரமமானதாக இருந்தது. அதனால் குழப்பமடைந்த பலவேளைகள் கொத்தணி அதிபருக்கும் எனக்கும் ஏற்பட்டதுண்டு.

எதிலும் சிந்தனைத் தெளிவுடன் செயற்பட வேண்டும் என்பதற்கு அதிபர் அவர்கள் கூறிய கௌதம புத்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த அறிவுரைக் கதையொன்று, எனது நினைவுகளில் தொலையாமல் இன்றும் இருக்கிறது.

கௌதம புத்தர் ஒருமுறை தனது சீடர்களுடன் ஒரு குளக்கரையோரமாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது தனது சீடர்களுள் ஒருவனை அழைத்து அந்தக் குளத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துவருமாறு கூறினார். அதைக் கேட்ட சீடன் தண்ணீர் எடுத்துவரப் பாத்திரத்துடன் குளக்கரைக்குச் சென்றான். அங்கே குளத்தின் ஊடாக அதனைக் கடந்து அப்பொழுதுதான் மாட்டு வண்டி ஒன்று அக்கரைக்குப் போய் கொண்டிருந்தது. அதனால் குளத்து நீர் கலங்கிச் சேறு கலந்ததாகக் காட்சி தந்தது. அதனை அவதானித்த சீடன் இந்தச் சேற்று நீரைத் தனது குருவான கௌதம புத்தருக்குக் குடிக்கக் கொடுக்க இயலாது என்பதால் நீரைப் பாத்திரத்தில் எடுக்காமலேயே திரும்பினான். திரும்பிய சீடன், குருவிடம் "குளத்து நீர் கலங்கிச் சேறு கலந்து காணப்படுகிறது. அது குடிக்க ஏற்றதாக இல்லை" எனக் கூறினான்.

நிலைமையை உணர்ந்து கொண்ட கௌதம புத்தர் சில நிமிட நேரங்கள் தாமதித்த பின்னர் சீடனை அழைத்துத் திரும்பவும் நீர் கொண்டு வருமாறு குளத்திற்கு அனுப்பினார். மீண்டும் குளத்தை நெருங்கிய சீடன் குளத்து நீர் அப்பொழுதும் தெளிவடையாமல் இருப்பதைக் கண்டான். அதனால் நீரெடுக்காது அவன் குருவிடம் வந்தான்.

திரும்ப வந்த சீடனைக் குரு பல மணி நேரம் தாமதிக்கச் செய்து, மீண்டும் குளத்தில் குடிநீர் எடுத்துவர அனுப்பினார். இம்முறை குளத்துக்குப் போனவன் தெளிந்த நீரை எடுத்துக் கொண்டு விரைவாகவே குருவிடத்துக்குத் திரும்பினான்.

அதனை அவதானித்த குரு சீடனைப் பார்த்து "உனக்கு இம்முறை எவ்வாறு தெளிந்த குடிநீர் கிடைத்தது தெரியுமா?" எனக் கேட்டார். பதிலளிக்கத் தெரியாமல் தயங்கிய சீடனை நோக்கி "சேறு கலந்த நீர் தெளிவடையும் வரை நீ காத்திருந்த தாலேயே அது கிடைத்தது. எவ்வேளை சேற்று நீர் தெளிவடைய நீ பல மணி நேரம் அமைதியாக இருக்க வேண்டும்" எனக் கூறினார்.

அத்துடன் "இவ்வாறுதான் உனக்கு மனக்கலக்கம் ஏற்படும் போதெல்லாம் நீ அமைதியாக இருந்தால் உன் சிந்தனை தெளிவடையும்" என்றார். இந்தக் கதையைச் சின்னத்தம்பி மாஸ்ரர் எனக்குச் சொல்லியதுடன் மனக்குழப்பம் ஏற்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் அதனை ஞாபகப்படுத்த மறப்பதில்லை. அந்தக் கதைக்கும் மேலாக அவரது செயற்பாடும் கௌதம புத்தர் கூறியதுபோல் சிந்தனைத் தெளிவு பெற 'அமைதியாக இரு' என்பதாக அமைந்தமை என்னையும் அவ்வழிக்கு இட்டுச் சென்றது.

வாழ்க்கை இனிமையானது. உயிர்வாழ்தல் அதன் ஓர் அங்கமாகவே உறுதிபெறுகிறது. உயிருடன் வாழ்வதற்காக ஒவ்வொரு மனிதனும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் உயர்வான தாகும். அதிலும் மேலாக அவன் மனிதனாக வாழ்ந்து தன்னைப் பண்படுத்திக் கொள்ளுதலே வாழ்தலின் மகத்துவமாகும். ஆனால் வாழ்தல் பல வேளைகளில் மனித மனத்தைக் கலங்க வைக்கிறது. எண்ணங்கள் குழம்பும் போது துயரங்கள் சூழ்ந்து கொள்ளுகின்றன. அவற்றிலிருந்து விடுபட அமைதியும் தெளிவான சிந்தனையும் அவசியமாகும்.

இதனை விளக்கவும் மனதில் பதிக்கவும் கௌதம புத்தரின் கதையுடன் அதனை எனக்குச் சொல்லிச் செயற்படுத்தியவர் சின்னத்தம்பி மாஸ்ரர். அவர் பதவியிலிருந்து இன்று இளைப்பாறியிருக்கிறார். எனினும் அவரைப் போன்ற நல்வழி காட்டும் நல்லவர்கள் பதவிகளில் இருப்பவர்களாக இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படும் சமூக மேம்பாட்டுக்கான தெளிவு ஆகும். ■

---

# தவறுரைக்கும் கல்முனை மணிக்கவிராயர்

■ மைதிலி தேவராஜா



நாம் வாழும் காலத்தில் மற்றையோர் மதிக்கும் மகான்களாக வாழவே ஆசைப்படுகிறோம். அவ்வாறு மகான்களாய் மாறுவதற்குத் தப்பேதும் செய்யாமல் புனிதர்களாய் இருப்பது கடினமானதாகவே தோன்றுகிறது எனினும் முயன்று பாருங்கள். இவை போன்ற தப்புகள் ஏற்படாமல் தவிர்த்து விடுங்கள் என்கிறார் கவிஞர்.

**அன்பர்களை வம்பர்களாய் எண்ணுதல் தப்பு! - அவர் அறிவுரைகள் மறுப்பதோ அதனிலும் தப்பு !**
**வம்பர்களை அன்பர்களாய் எண்ணுதல் தப்பு!-அவர் வார்த்தைகளை ஏற்பதுவோ அதனிலும் தப்பு !**

நாம் பல வேளைகளில் எமது அறியாமையால் அன்பர்களை வம்பர்களாய் எண்ணிவிடுகிறோம் அதனால் அவர்களின் அறிவுரைகளை ஏற்பதற்குப் மறுத்து விடுகிறோம். இதற்கு மாறாக வம்பர்களை அன்பர்களாய் எண்ணுதலும் அவர் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுதலும் எமது வழக்கமாகியும் விடுகிறது இது எல்லாவற்றையும் விட மேலான தப்பு என்கிறார் அவர்.

**கற்றவரைக் கேலிசெய்து அவமதித்தல் தப்பு! - அந்த கற்றவர்கள் கடுகடுத்தல் அதனிலும் தப்பு !**
**உற்றவரை மற்றவராய்க் கொள்ளுதல் தப்பு! - அந்த உற்றவர்கள் பகையாதல் அதனிலும் தப்பு!**

கற்றவரைப் படித்தவரைப் பண்புடையோரைக் கேலிசெய்து அவமதித்தல் தவறானது. கற்றவர் எனச் சொல்லிக் கொள்வோர் தாம் கற்றதை மறந்து கடுகடுத்தலும் கற்றதன்வழி ஒழுகாமையும்: உறவினரைப் பகைவராகக் கொள்ளுதலும் எல்லா வகையிலும் மோசமான தப்புகளாகும்.

**உழைத்து அயலைக் கொள்ளையிட்டு வாழ்வது தப்பு! பிறர் அறம்பலங்களைச் சீரழித்தல் அதனிலும் தப்பு!**
**படித்தவர்தம் நூல்தனைப் பழிப்பது தப்பு! நம் பெற்றவரைப் புறக்கணித்தல் அதனிலும் தப்பு!**

அபகரித்தல் கொள்ளையிடுதல் பிறர் வாழ்வைச் சீரழித்தல் என்பவை தப்பான செயல்களாகும் அறிஞர் தம் நூல்களைப் பழித்துரைப்பதும் தம்மைப் பெற்றவரைப் புறக்கணித்தலும் பெரியதொரு தவறாகும் என்கிறார்.

**கன்னியரைக் காதலித்துக் கைவிடுதல் தப்பு! அவர் கற்புதனைப் பறிப்பதுவோ அதனிலும் தப்பு!**
**துன்பத்தை மனதிருத்தித் துயருறுதல் தப்பு! -அந்த துயர் வருத்த உயிரைவிடுதல் அதனிலும் தப்பு!**

காதலித்துக் கன்னியரை ஏமாற்றிக் கைவிடுதல் தவறானது பல ஆண்களுக்கு அறிவுரைதரும் கவிஞர் அத்தகைய துன்பத்தை மறந்து கற்போடு வாழ்க்கைக்குத் துணியாதிருத்தல் வேண்டும் என்கிறார் கவிஞரிவர். ஓர் ஆண் என்பதால் இக்கவிதை வரிகள் ஒருதலைப்பட்சமாக ஒலிப்பதாகத் தோன்றினும் பால் மாற்றம் செய்துபார்த்தாலும் பொருந்துமேயல்லவா.

தவறுகளைத் தெரிந்துரைத்தல் மட்டுமல்ல அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்பதே அவரின் கவிதைச் சிறப்பாகும். கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கவிஞர் என்பதைவிடவும் [illegible]

இவர் ஆரம்பத்தில் வீரகேசரி சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் எழுதி வந்தார். சமாதான நீதவானும் சிறந்த பேச்சாளருமான கவிஞர் இன்று மணிக்கவிராயர் எனும் புனை பெயரில் எழுதி வருகிறார். கவிநிலா "கவித்திலகம்" என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர். அறுவடை எனும் அவரது கவிதை நூலில் இருந்து பெறப்பட்ட கவிதையே இது. அவரது கவிதைகள் இலக்கியப் பரப்பில் சிறப்புற்றோங்கும் என்பது நிச்சயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி பேரவலம் இலங்கையில் வாழும் இரு இனங்களினதும் ஒன்று பட்ட வாழ்க்கையை வேண்டி நின்றது. அதற்கான சந்தர்ப்பங்களும் அருகிலேயே இருந்தன. பேரலை தாக்கிய களத்தில் உருவாகியிருந்த மனிதாபிமான உறவு நிலை இரு இனங்களும் இனி வரும் காலங்களில் ஒற்றுமையாய் வாழ்வதற்கான முதற் தொடக்கம் எனப் பலராலும் ஆருடம் கூறப்பட்டிருந்தது. அழிவில் இருந்து மீள எழுவதற்காக நீண்ட ஆதரவுக்கரங்களையும், இரு இனத்தவரும் இணைந்தே பற்றிக் கொள்ள வேண்டும் என சர்வதேச சமூகத்தவரால் எதிர்பார்க்கப்பட்டதால் இலங்கையரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினர். அது இன நல்லிணக்கத்திற்கான வாய்ப்பாகப் பலராலும் பார்க்கப்பட்டது. ஆயினும் ஜேவிபியினர் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மதித்து பொதுக்கட்டமைப்பிற்கு இடைக்காலத் தடையுத்தரவை நீதி மன்றத்தில் வழங்கியவர் இந்த சரத் என் சில்வா.

வடக்கு கிழக்கு தமிழரின் பூர்வீக நிலம். அவர்களின் சொந்த வாழ்வுக்கான அனைத்து விளைச்சல்களும் இங்கிருந்தே உற்பத்தியாகின்றன. இப்பிரதேசத்தில் அவர்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தும் பிந்திய வரலாற்றுச் சான்றுகள் இப்போதும் ஆதாரபூர்வமாய் கிடைத்து வருகின்றன. ஆனால் பிரித்தானியருக்குப் பின்னர் இலங்கையின் ஆட்சிக்கட்டிலேறிய எந்த அரசாங்கமும் இந்த மெய்மையை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக வடக்கு கிழக்கு பெரும்பான்மை இனத்தவரின் பூர்வீக நிலம் என்பதையே அனைத்துப் பெரும்பான்மையின வாதிகளும் அடித்துச் சத்தியம் செய்து வந்திருக்கின்றனர். இந்த அடிப்படைச் சிக்கலில் இருந்து தோற்றம் பெற்ற இன விடுதலைப் போராட்டத்தை ஆரம்பத்திலேயே விளங்கிக் கொண்ட இந்தியா, இவ்விரு திசைப் பிராந்தியங்களையும் இணைத்து தமிழ் தரப்பிடம் சுயாட்சி அடிப்படையான தீர்வுப் பொதியை வழங்க முயற்சித்தது. அந்தச் சந்தர்ப்பம் கைநழுவிப் போனதால் 2009 வரை 13ஆம் சீர்திருத்தத்தின் படியான இனப்பிரச்சினை தீர்வு பற்றி பேசப்பட்டது. ஆனாலும் அதற்கும் ஆப்பு வைத்தார் சரத் என் சில்வா. சில வருடங்களுக்கு முன்னர் வடக்கு கிழக்கைத் தனியாக பிரிப்பதற்காக இவர் வழங்கிய தீர்ப்புடன் இனச்சிக்கலைக் மேலும் கூர்மையாக்கி விட்டுச் சென்றார்.

# நீதி

- தம்பி



கடந்த வாரத்தின் இலங்கையில் அரசியல் அழுந்த அலைகளுக்குள் அமிழ்ந்து போவதற்கான பல சந்தர்ப்பங்களை எதிர் நோக்கியிருந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெளிநாட்டு விஜயம், அதன் விளைவால் அடிக்கடி ஏற்பட்ட இராஜதந்திர கருத்து மோதல்கள், அவுஸ்ரேலியா மற்றும் கனடாவின் அறிக்கை வெருட்டல்கள், பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் ஏற்பட்ட அவமதிப்புமனு, என பேரழுத்தங்கள் தொடர் அலையாய் கொழும்பு அரசியலைத் தாக்கின. இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் தனிப்பட்ட, அரசியல் சார்ந்த நபர்கள் மீதான தாக்குதல்களும், அரசியல் பழிவாங்கல்களும் இடம் பெற்றிருந்தன. இதில் தந்தை செல்வாவின் சிலை உடைப்பு விவகாரமும் ,முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா மீதான தாக்குதல்களும் பரவலாக பேசப்பட்ட விடயங்களாக இருந்தன. தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தைக் கடவுளிடம் ஒப்படைத்துவிட்டு சரணடைந்தவர் சிலையின் தலையுடைப்பு விவகாரம் தமிழ் மக்களின் உணர்வு சார்ந்த ஒன்றாக மாற்றப்பட்டு விட்டதால், அது மென்மையான அறிக்கைகள் மற்றும் உரையாடல்களுடன் முடிவுக்கு வந்து விட்டது. ஆனால் பெரும்பான்மை இனத்தின் நீதித் தாதனாக ஒரு காலத்தில் சிங்கள மக்களால் கொண்டாடப்பட்ட சரத் என் சில்வா மீதான விசாரணை ஆலோசிப்புக்கள் முற்றுமுழுதான பழிவாங்கல் அரசியலாகவே பலராலும் பேசப்பட்டது.

சரத் என் செல்வா, இலங்கையின் அரசியல் மற்றும் நீதித்துறையின் வரலாற்றில் பிரகாசம் மிக்க ஒருவராக இடம் பிடித்திருந்தவர். 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை இவர் தமிழருக்கு எதிராகவும் தன் நிலைப்பட்ட அரசுக்கு ஆதரவாகவும் ஆடிய நீதியாட்டங்கள் வரலாறெங்கும் பதிவு செய்யப்பட்டுக் கிடக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தினை ஒரு வருடத்திற்கு முன்னராகவே முடிவுக்கு கொண்டுவரும் தீர்ப்பை வழங்கியதிலிருந்து ஆரம்பமாகியது அதிரடிப் பயணம். அதற்குப் பின்னர் பொதுக்கட்டமைப்பு மீதான இடைக்காலத் தடை, வடக்கு கிழக்கை மறுபடியும் இரண்டாகப் பிரிப்பதற்கான தீர்ப்பை வழங்கியமை, ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு தாவிய உறுப்பினர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையை பறிக்க முடியாது எனத் தீர்ப்பளித்தமை போன்ற அட்டகாசங்களால் அனைவரினது கவனத்தையும் ஈர்த்திருந்தார். இப்படி அருந்ததாரப்புக்க அறமாகவும்

தமிழருக்கு எதிராகவும் பல அரிய தீர்ப்புக்களை வழங்கியிருந்தும் அரசை விருந்து 2009 ஆம் ஆண்டில் தூக்கி வீசப்பட்டார். போரின் முடிவுகள் தலைகால் தெரியாத ஆட்டங்களை ஏற்படுத்தியிருந்த பின்னணியில் சரத் என் சில்வாவின் பதவிக்கும் ஆப்பு வைக்கப்பட்டது. அரசியல் சூட்டோடு வாழ்ந்த ஒருவருக்கு இருக்கும் அத்தனை ஆசாபாசங்களும் இந்த மனுசனையும் தொற்றிக் கொண்டதால் உடனடியாகவே அரசுக்கு எதிர் நிலையெடுத்தார். அரசுக்கு எதிரான கட்சிகடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் கூட சரத் பொன்சேகாவை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அத்தோடு ஏற்பட்ட அரசுடனான முறுகல் நிலை பல உண்மைகளை போட்டுடைக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. ஒவ்வொரு சர்ச்சை மிகு தீர்ப்பிற்கும் பின்னால் இழையோடிய அரசியலை பொது வெளியில் போட்டுடைத்தார். மகிந்த தலைமையிலான அரசை விமர்சிப்பதற்காகவே தனக்குக் கிடைத்த பேச்சு மேடைகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டார். தமிழர் தரப்பும், தமிழ் மக்களும் இலங்கையரசினால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர் என்ற பெரியதொரு உண்மைக் கண்டுபிடிப்பை கூட அவ்வாறானதொரு விமர்சனச் சந்தர்ப்பத்தில் இவரால் கண்டுபிடிக்க முடிந்திருந்தது.

இவ்வாறான எதிர் நடவடிக்கைகள் ஊடாக சரத் பொன்சேகாவை வெளியிலிருந்து வழிமொழியும் ஒரு நபராக இவர் மாறி வருவதை உணர்ந்து கொண்ட அரசு இவர் மீதான கவனிப்பைத் தொடங்கியது.

பழைய கடுப்பில் இருந்த நீதிபதிகள் நடவடிக்கைக்குத் தயாராக இருந்தனர். சரத் என் சில்வா தனது பதவிக் காலத்தில் உண்டாக்கி வைத்திருந்த வசைஞர் கள் இந்தச் சந்தர்ப்பத்தை தவற விடவில்லை. இவர் நீதியரசராய் இருந்த காலத்தில் நீதித்துறை சார்ந்த பலரை வீட்டுக்கனுப்பினார். பல தீர்ப்புக்கள் நியாயமான தீர்ப்பளிப்புக்களுக்குட்படவில்லை. எனப் பல குற்றச்சாட்டுக் களை முன் வைத்து, இவரை விசாரணை செய்வதற்கான தெரிவுக்குழு ஒன்றை உருவாக்குவதற்கான வரைவுகளை நாமல் ராஜபக்ச விடம் வழங்கினர். அது சரத்திற்கு பயத்தினை ஏற்படுத்துவதாக அமைந்தாலும் காட்டிக் கொள்ள வில்லை. நாடாளுமன்றத்திற்கு நீதித்துறை சார்ந்த விடயங்களை விசாரிப்பதற்கு இடமில்லையெனவும், அப்படி விசாரிக்க முற்பட்டால் ஐ.நா வரை இப்பிரச்சினையைக் கொண்டு செல்வேன் எனவும், நீதித்துறையை அடிமைப் படுத்துவதற்காகவே அரசு இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனது எனவும் தெரிவித்து வருகின்றார். இவரது கருத்துக் களில் நியாயமான பக்கங்களிருப்பினும் அரசு கைவிடுமா என்பது சந்தேகமே.

ஏனெனில் இலங்கையில் அரசை விமர்சிப்பவர்கள் உயிரோடு வாழ்வதே கடினம். அப்படி இருக்கையில் விமர்சித்து விட்டு அரசுக்கு எதிரானவர்களோடு கூட்டுச் சேர்ந்திருந்தால் விசாரணையிலிருந்து தப்பிக்க எப்படி முடியும்? சிங்கள மக்கள் மத்தியிலிருந்து கிளம்பும் எந்த எதிர்ப்பையும் அங்கீகரிக்காத அரசு முன்னாள் நீதியரசர் என்ற பதவியிலிருந்தவரை மட்டும் விட்டு வைக்காது என்றே கூறலாம். ஆரம்பத்தில் அரசை கடுமையாக சாடி, எழுதியும், பேசியும் வந்தவர்கள் இப்படியான சிக்கல்களில் சிக்கிய பின்னர் என்ன முடிவெடுத்து, இப்போதும் இலங்கையில் வாழ்கின்றனரோ அப்படி ஒரு முடிவெடுத்தால் தான் சரத் என் சில்வாவிற்கும் இங்கு சுதந்திரமாக நிலவ வழியேற்படும். இல்லையேல் சரத் பொன்சேகாவிற்குப் பக்கத்து அறையில் ஒரு வசதியான இடம் இப்போதே பார்த்துக் கொள்வது எதிர்காலத்திற்கு வாய்ப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலைகளையும் கொலை செய்தல்

**கொ**லைகள் பலவிதமானவை. வன்முறையைப் பிரயோகித்து, தனியே மனித உயிர்களைப் பறித்தெடுப்பதுதான் கொலைகள் என்ற வரைவிலக்கணமே எம்மில் பலருக்கும் மனப்பாடமான ஒன்று. ஆனால் ஒரு மனித உயிரைக் கொல்வதை விடவும், ஒரு இனத்தின் ஆன்மாவைக் கொலை செய்தல் என்பதே மிகப்பாரதூரமான விளைவுகளையும், தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியது. எனவேதான் எப்போதும் அதிகாரம் தான் அடக்கியாளநினைக்கும் இனங்களின் தன்மானத்தின் குறிகாட்டிகளாக இருக்கும் அடையாளங்கள் மீதே யுத்தத்தின் முதலாவது பிரகடனத்தைச் செய்து கொள்கின்றது. அதே போன்று அந்த யுத்தத்தின் இறுதியில் எஞ்சும் வெறுப்புடன் கூடிய உமிழ்நீரும் அந்த அடையாளங்கள் மீதே உமிழப்படுகின்றது.

ஈராக்கில் அதன் அப்போதைய ஆட்சியாளர் சதாம் ஹுசேனின் உருவப்பொம்மைகளை எரிப்பதில் தொடங்கிய அமெரிக்காவின் வன்மம், அவரது ஆட்சியை அகற்றி, தலைநகர் பக்தாத்திலிருந்த பிரமாண்டமான சிலையை உடைத்த பின்னர்தான் ஓய்ந்தது. அதன் பிறகு பிடிபட்ட சதாமை, ஆற அமர விசாரிப்பது போல பாவலா காட்டிவிட்டு திடீரென ஒருநாள் தூக்கிலிட்ட பின்னரும், அவரது உடலைப் புதைக்கப்பட்ட இடத்தை அமெரிக்கா வெளியிடவேயில்லை. சதாம் மட்டுமல்லாது, சேகுவரா, சொமா பின்லேடன், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், கடைசியாக இப்போது லிபிய அதிபர்கடாபி போன்றோர் கொல்லப்பட்டதாக திமிரோடு அறிவித்த அதிகாரத் தரப்புகள், அவர்களின் உடலங்களுக்கு இறுதியில் என்னானது என்பதை கடைசி வரைக்கும் வெளியிடாமல், தங்களை இரகசியம் போல பொத்திப் பாதுகாத்தே வருகின்றன. ஏனெனில் என்றோ ஒருநாள் இவர்கள் புதைக்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட அந்த இடமே அதிகாரத்துக்கெதிரான ஆன்மாவாக உயிர்த்தெழுந்து, மக்களை மீண்டும் விழிப்படைய வைத்துவிடும் என்ற பயமே இதற்குக் காரணம்.

இலங்கையின் ஆட்சிக்கட்டிலுக்கு வந்து சேர்கின்ற எல்லா அரசுகளும் அடையாளங்களைக் கொலைசெய்தல் அல்லது தமிழ்மக்களின் ஆன்மாவுடன் ஒன்றிப்போய்விட்ட, அவர்களின் நினைவுகளுடன் உறைந்துபோய்விட்ட விடயங்களை அழித்தல் என்ற உத்தியை தாராளமாகவே பயன்படுத்தி வந்தன. யாழ்ப்பாணத்து நூலக எரிப்பு, மாவீரர் மயானங்களின் சிதைப்பு, புலிகளின் தலைவரது வீடு இடிப்பு என இன்னமும் அந்தக் கைங்கரியத்தை விடாது தொடர்கிறது பேரினவாதம். கடைசியாகப் பேரினவாதிகளின் கைகளில் தமிழ் மக்களுக்காக சாத்வீக வழியில் போராடிய தந்தை செல்வா சிக்கிக்கொண்டுவிட்டார்.

திருமலையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட தந்தை செல்வாவின் சிலை சென்றவாரம் இரவோடிரவாகத் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது. எந்தவிதமான காரண காரியங்களுமின்றி, திடீரென தந்தை செல்வாவை இவ்வாறு சிரச்சேதம் செய்தவர்கள் யார்? எதற்காக இந்தத் தண்டனை? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. மூவின மக்களும் செறிவாக வாழும் மாவட்டமான திருகோணமலையில் தமிழர்களின் உரிமைக்காக அரசியல் ரீதியாகப்போராடிய தலைவரின் சிலையை உடைப்பதற்கு யாருக்குத் தைரியம் இருக்கும் என எல்லோருக்குமே தெரியும். ஆனால் என்ன நோக்கத்துக்காக இவ்வாறான இழி செயலில் சிலை உடைப்பாளர்கள் இறங்கினார்கள் என்பதற்கு பல்வேறு கதைகள் சொல்லப்படுகின்றன. அமெரிக்காவுக்கு சென்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அங்கு அரசுக்கு எதிரான கருத்துக்களை பகிர்ந்து கொண்டதற்குப் பழிவாங்குமுகமாகவே சிலை உடைக்கப்பட்டிருக்கலாம் எனப் பலரும் கருதுகின்றனர். வேறு சிலை தமிழர்களை அடையாளப்படுத்தும் சின்னங்களை அழித்து வரும் நடவடிக்கையில் ஒரு அங்கமே இந்தச் சிலை உடைப்பு என்கின்றனர். இவற்றில் எது சரியானது எனத் தெரியாவிட்டாலும், ஏதோ ஒரு விதத்தில் தமிழ் மக்களை அவமானப்படுத்துதல் அல்லது பழிவாங்குதல் அல்லது ஒரு இனக்கலவரத்துக்கான தூண்டுதலை ஏற்படுத்துதல் என்பதே இந்த ஈனச்செயலுக்குப் பின்னால் இருப்பதாக எண்ணமுடிகின்றது.

தந்தை செல்வா என்ற விம்பம் தனியே ஒரு அரசியல் தலைவரை மாத்திரம் குறித்து நிற்பதல்ல. அது அடக்குமுறையில் இருந்து விடுபடத்துடிக்கின்ற ஒட்டுமொத்த தமிழினத்தினதும் உள்ளார்ந்த அபிலாஷைகளைச் சொல்லிநிற்கின்ற ஒரு குறியீடும் கூட. ஒவ்வொருமுறையும் தந்தை செல்வநாயகத்தின் நினைவு தினம் வருகின்ற போது அவருக்கு மலர் மாலை சூட்டுகின்ற போதும், அல்லது அவரை நினைக்கின்ற போதும், இன்னமும் தமிழ் மக்களின் மீது பாரமாக அழுத்துகின்ற அடக்குமுறைச் சங்கிலியே ஞாபகத்துக்கு வரும். அது தொடர்ந்து ஏதோ ஒருவிதத்தில் எமக்கான உரிமைகளை நோக்கிப் பயணிப்பதற்கான உந்துதலைக் கொடுக்கும். எனவே செல்வாவின் சிலையில் அவரது தலையைக் கொய்து, மலர்மாலை சூட்டி, இறுதிச்சடங்கு செய்து மகிழ்ந்திருப்பதன் மூலம் தமிழ்மக்களின் உரிமைகளுக்கு சமாதி கட்டிவிட்டதாகவே இந்தக் காரியத்தில் ஈடுபட்டவர்கள் நினைத்திருப்பார்கள். அத்துடன் தமது தன்மானத்துக்கு விடப்பட்ட சவாலாக எடுத்துக்கொண்டு தமிழர்கள் ஏதாவது வன்முறையில் ஈடுபட்டால், அதைச் சாக்காக வைத்து திருகோணமலையில் ஒரு கறுப்பு நவம்பரைக் கொண்டாட பேரினவாதிகள் நினைத்திருக்கலாம். மாவிலாற்று அணையை புலிகள் பூட்டி வைத்ததைச் சாட்டாக வைத்து இறுதியுத்தத்தை தொடங்கியது போல இப்போதும் ஒரு இன அழிப்புக்கான வினையூக்கியாக இந்தச்சிலை உடைப்பு விவகாரத்தை பேரினவாதிகள் கைக்கொண்டிருக்கலாம். ஏனெனில் பேரினவாதிகளின் நீண்டகாலத் திட்டங்களில் ஒன்று, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையை முற்றுமுழுதாகச் சிங்களமயப்படுத்துவதுதான். இதற்காக

■ பிரமன்


அன்றும் பகிரங்கமாகப் பேரினவாதம் உழைத்து வருகின்றது. அந்த முயற்சிக்கு பலனும் கிடைத்திருக்கிறது. மெல்ல மெல்ல தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கூட இல்லாதாக்கும் அளவுக்கு சிங்களக்குடியேற்றங்களும், சிங்கள மக்களின் குடிசன அடர்த்தியும் பெருகிவிட்டன.

இந்த நிலையில் இப்படியான ஆத்திரமூட்டும் செயல்கள் மூலம் எப்படியாவது ஒரு வன்முறையைத் தமிழர்கள் தரப்பிலிருந்து தூண்டி, அதன் மூலம் வன்முறையை அடக்குகிறோம் என்ற போர்வையில் திருமலையில் தமிழர்களை வழித்து துடைக்கவே சிலையை உடைத்தவர்கள் திட்டம் போட்டிருக்கக்கூடும். சிலைகளை வைத்து அரசியல் ஆதாயங்களைச் செய்வது திருமலையில் இது ஒன்றும் முதல்முறை அல்ல. திருகோணமலையின் நகரத்தின் மத்தியில் புத்தர் சிலை ஒன்றை திடுதிடுப்பென அமைத்து அதனூடாக ஒரு இனப்பூசல் தோற்றுவிக்கப்பட்டதை அவ்வளவு எளிதில் மறந்துவிடமுடியாது. இப்போது அதற்கு ஒப்பான வகையில் இன்னொரு பூசலைத் தோற்றுவிக்க தந்தை செல்வாவின் சிலையின் தலையைக் கொய்திருக்கிறார்கள்.

தந்தை செல்வாவின் தலை துண்டிக்கப்பட்ட புகைப்படங்களைப் பத்திரிகையில் பார்த்த முதியவர் ஒருவர் இப்படிச் சொன்னார்

"முந்தி எண்பத்து மூண்டிலையும் இப்பிடித்தான், தங்கத்துரை, குட்டிமணி ஏண்டுபேரையும் கண்ணைத் தோண்டிப்போட்டு அவங்கட தலையை வெட்டி ஜீப்பின்ர முன்பக்கம் குத்திக் கொண்டு ஹோட்டில திரிஞ்சவங்கள். இப்ப தந்தை செல்வாவின்ர சிலையையும் பார்க்க அந்த நினைப்புத்தான் வருகுது."

உண்மைதான்! மனிதக் கொலைகளை விடவும் இத்தகைய இனத்தின் ஆன்மாவைக்கொலை செய்ய எத்தனிக்கும் போது அதிகமாக மனது வலிக்கத்தான் செய்கிறது.★









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






பிளாக் கோளின் ஈர்ப்பு விசைக்குள் அகப்பட்டு அதற்குள் படுவேகமாக விழுந்து கொண்டிருந்த கலைடவுக்குள் இருந்த வேற்றுக்கிர சுவாசிகளான செதிலும், சதுயாவும் செய்வதறியாது விழி பிதுங்கிக் கொண்டிருந்தனர்.

போதாக்குறைக்குக் கலைடவின் அனைத்துச் செயற்பாடுகளும் ஸ்தம் பித்துப்போக அவர்கள் தமது கடைசி மணித்துளி களை எண்ண ஆரம்பித்தனர்.

பயரான அமைதியைக் குலைத்த சதுயா ஈனஸ்வரத்தில் முனகினான்.

"செதில் இனி நாம் என்ன செய்வது? நம்மை எவ்வாறு காப்பாற்றிக் கொள் வது?"

"அது தான் எனக்குப் புரியவில்லை."

"ஏதாவது சொல்லேன் செதில்."

" என்னத்தைச் செய்வது சதுயா. நெக் கடவுளிடம் தொடர்பை ஏற்படுத்தி ஏதாவது உதவி கேட்கலாம். ஆனால் அதுவும் இப்ப முடியாது."

"ஏன் செதில்?"

"கலைடவின் எந்த ஒரு கருவியும் வேலை செய்ய வில்லை."

"அப்ப நாம் சாவது உறுதி....?"

செதிலும் அனுங்கிய வாறு "கிட்டத்தட்ட..." என்றான்.

இதை எதையும் கருத் தில் கொள்ளாது கலை... பாதாளத்துள் விழுவது போன்று பிளாக் கோளிற் குள் விழுந்து கொண்டி ருந்தது.

எல்லாம் வல்லவன் தந்த ஆயிரம் வருட ஆயுளை நினைத்து ஏங் கினான் சதுயா.

"கலை...விலில் எல்லாம் வல்லவன் தந்த ஆயுள் கூட வீணாகிவிட்டது செதில்."

செதில் கண்களை மூடித் தனது சாவை எதிர் பார்த் தவனாக ...

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன்" என் றான்.

"நம்முடைய சாவு எப்படி நிகழும் செதில்".

"இன்னும் சிறிது நேரத்தில் பிளாக் கோளின் ஈர்ப்பு விசையைத் தாங் காது நமது கலைட வெடித் துச் சிதறும்".

"என்ன......?"

அதிர்ந்தான் சதுயா.

"அப்படியென்றால் கலைடவுடன் சேர்ந்து நாமும் வெடித்து...."

செதில் கண்ணைத் திறவாமலேயே 'இம்...' என்றான்.

★ ★ ★

செல்போன் அலைவ தரவினின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிகிதா சுதாவின் தோள் தொட்டு அப்படியென்றால் இந் தக் கெல்லியா மலையில் நாம் இருவர் மட்டும் தான் கண்ணுக்குத் தெரி யாத மாயாவைச் சந்திக் கப் போகிறோம்.

"ஏய் என்ன நிகிதா. அதை சோகத்தோட சொல்லுறாய்.... சும்மா மாக்கட்டி வீரத்தோட சொல்லு."

"சும்மா போ சுதா, துவக்கால சுட்ட பன்றிகளை நேரத்தில் மறைந்திட்டுது, இந்த மாயாவைச் சுடவா வீரம் எங்க இருந்து வரப்போகுது."

"இங்க பார் நிகி. எத்தனையோ இராணுவ முகாம் களுக்குள்ள போய் பயப்படாமல் செய்தி சேகரித் துக்கொண்டு வந்தனாங்கள். இது வெறும் ஜிபுப்பி."

"அது கண்ணுக்குத் தெரிந்த எதிரிகளை எயாத் நினாங்கள். ஆனால் இது..."

"ரிலாக்ஸ் நிகி.... ரிலாக்ஸ். அது ஒரு ரிஸ்க் என்டால் இது வேற விதமான ரிஸ்க். எங்கட தொழி லில் பயம் புகுந்தா ஒன்றுமே நடக்காது. உயிரை வெறுத்துத்தான் இந்த வேலையிலேயே சேர்ந்தனாங் கள்."

நிகிதா கொஞ்சம் தெளிந்தவளாக - "ஓகே சுதா. வாறது வரட்டும் இரண்டிலஒரு கைபார்ப்பம்" என்றாள்.

"குட். இப்பதான் என்ர நிகிதா' என்று கூறிய வனாக நிகிதாவின் கன்னத்தை வெடுக்கென்று கிள்ளினான்.

திடீரென்று ஒரு கராட்டி வெட்டு வெட்டினாள் நிகிதா....

"ஐயோ.... அம்மா.... கத்தினான் அவன். என்னை தனிய நிக்கிறனெண்டு உரசிப்பார்க்கிறியா?"

"அதில்லைச் செல்லம்மா..." என்று கூறியவனாக அவன் அவளருகில் நெருங்க... மீண்டும் அவள்...

'ஜா...கூ...' எனக் கராட்டி ஸ்ரைல் எடுக்க...

"அம்மாடியோவ் இந்த உடம்பு தாங்காதம்மா..." என்று சுதா பொய்யாக ஓட...

'ஹா..ஹா...ஹா...' என்று நிகிதா சிரிக்க ஆரம் பித்தாள்.

விளையாட்டாக ஓடிய சுதா திடீரென்று நின்று எதையோ அவதானித்தவனாக

"பொறு நிகி சற்று அமைதியாய் இரு."

சுவிச் போட்டவன் போல தனது சிரிப்பை நிறுத் திய வளாகக் கூர்ந்து அவதானிக்கத் தொடங்கினாள் நிகிதா.

எங்கோ தூரத்தில் மரம், தடிகள் முறி படுகின்ற ஓசை தெளிவாகக் கேட்க ஆரம் பித்தது.


எவருமே இல்லாத இந்த சூனிய மலையில் என்ன இப்படி ஒரு சத்தம்...?

"பொறு சதுயா.... அவளைக் கதைக் காதே" என்று கூறிவிட்டுச் சற்று ஆழமாக அவ்வொலியைக் கேட்டான்.

அவன் கூர்ந்து கேட்கக் கேட்க அவ ளது முகமும் ஒரு வெருட்சியாக மாறிக் கொண்டிருந்தது. சட்டென்று அவன் கூறினான்.

"நிகி அவ்வொலி எம்மை நோக்கித்தான் வந்து கொண் டிருக்கிறது.........."

(ஆபத்து வரும்)





# இலவச வினாத்தாள் திருத்தற்சேவையுடன் புலமைச்சுடர் பிரதிகளைச் சந்தாமூலம் பெற விரும்பும் பெற்றோர்களே.....




இக் கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகள் அல்லது நீங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள விற்பனை முகவர்களிடம் இருந்து பிரதி களைப் பெறுவதில் சிரமங்கள் உள்ள தரம் 3, 4 மாணவர்களின் பெற்றோர் களே! உங்கள் பிள்ளைகளுக்கு ''புலமைச்சுடர்'' பிரதியைப் பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 40 பிரதிகள் வெளிவரவுள்ளன. ஒரு பிரதி 15 ரூபாப்படி 40 பிரதிகளுக்கும் 600 ரூபாவும், தபால் கட்டணமாக 400 ரூபாவும் மொத்த மாக 1000 ரூபாவை காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக் கணக் கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை

| | |
|---|---|
| காசுக்கட்டளையாயின்- "கணக்காளர், Landmark Enterprises" என்ற பெயருக்கு கிராண்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக்கூடியவாறு | வங்கி வைப்பாயின் - (126- 1- 001-0-3452799) என்ற மக்கள் வங்கி இலக்கக் கணக்கில் Landmark Enterprises, கிராண்ட்பாஸ்) |

மேற்கூறிய முறைகளினூடாக அனுப்பிய காசுக்கட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தாப்படிவத்துடன் இணைத்து ''விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.,'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

### புலமைச்சுடர் சந்தாப்படிவம்

1. பெயர் : ..................................................
2. விலாசம் : ..................................................
   ..................................................
3. தொ.பேசி இலக்கம் : ..................................................
4. பிரதிகளின் எண்ணிக்கை: ..................................................
5. செலுத்தப்பட்ட பணம் : .............................. ரூபா
6. வைப்புச் செய்த முறை : வங்கி / காசுக்கட்டளை

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர் : 0716850006/ 0115738855

## சந்தா பிரதிக்கான வினாத்தாள் திருத்தற்சேவை

சந்தா மூலம் பிரதியைப் பெறும் மாணவர்களுக்கு இலவசமாக வினாத் தாள் திருத்தற்சேவையினை புலமைச்சுடர் கையேடானது ஆற்றவுள்ளது. இக்கையேட்டில் வரும் வினாத்தாள்களுக்கான விடைகளை எழுதி ''கல்விச் சுடர், வினாத்தாள் திருத்தற் சேவை, 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு 14'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அவ்வினாத்தாள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் திருத்தப்பட்டு புள்ளிகளுடன் அடுத்த வாரபுலமைச்சுடருடன் அனுப்பிவைக்கப்படும். இதனால் நீங்கள் இப்பரீட் சைகளில் பெறும் உண்மையான புள்ளிகளை அறிந்து உங்களைத் திருத்திக்கொள்ள இச்சேவை உங்களுக்கு பெரிதும் உதவும் என நம்புகின் றேன். எனவே சந்தா மூலம் பிரதியைப் பெற்று புலமைச்சுடரின் இச் சேவையின் பயனைப் பெறுக.

- ஆசிரியர் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களப் புயல்

# நெப்போலியன்

04



ஏமாற்றத்திலும் கோபத்திலும் பொங்கிய பெரும்பான்மை மக்கள், அரசர் ஆட்சியின்மீது வெறுப்பு கொண்டார்கள். முதன் முறையாக, பிரான்ஸுக்கு ராஜாவெல்லாம் வேண்டாம், எங்களை நாங்களே ஆட்சி செய்துகொள்கிறோம், என்று ஆயுதம் ஏந்திப் புரட்சி பண்ண ஆரம்பித்தார்கள்.

இதனிடையே, 1785 -ம் ஆண்டு பாரிஸ் 'ரோயல் மிலிட்டரி' பள்ளியிலிருந்து தேர்ச்சி பெற்று வெளியே வந்த நெப்போலியனுக்கு, உடனடியாக பிரெஞ்சு இராணுவத்தில் வேலை கிடைத்தது. அப்போது அவனுக்கு வயது பதினாறு.

தன்னுடைய புத்தம் புது இராணுவச் சீருடையைப் பெருமிதத்தோடு அணிந்துகொண்டு, போர் வாளை இடுப்பில் கட்டிக்கொண்டான் அவன்.

தன்னுடைய தாயகமான கோர்ஸிகாவை ஆக்கிரமித்திருக்கிற பிரெஞ்சு அரசாங்கத்தின்கீழ் வேலைக்குச் சேர்வதில் நெப்போலியனுக்கு எந்த விதமான தயக்கமும் இல்லை.

'இந்த வாள் பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமானது. ஆனால், இதன் கூர்மை எனக்குச் சொந்தமானது' என்று நினைத்துக்கொண்டான் அவன்.

நெப்போலியன் பிரெஞ்சு அரசாங்கத்திடம் சம்பளம் பெற்றானே தவிர, அவர்களுக்கு விசுவாசமானவனாக இல்லை. கோர்ஸிகாவில் அதே பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்துவதற்கு அவன் மனத் தளவில் தயாராகிக் கொண்டிருந்தான்.

இதனால், பிரெஞ்சுப் புரட்சி தீவிரமடைந்த போது, தான் எந்தப்பக்கம் சேரவேண்டும் என்பதில் நெப்போலியனுக்கு எந்தவிதமான குழப்பமும் இல்லை. நடக்கிற ஆட்சியில் என்னென்ன பிரச்சினைகள் என்பதைப் படித்துக் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்த நெப்போலியன், மக்களின் புரட்சி ஜெயிக்க வேண்டும் என்றுதான் விரும்பினான்.

ஆனால் பிரெஞ்சுப் புரட்சியில் நெப்போலியன் நேரடியாகவும் தீவிரமாகவும் கூடப் பங்கேற்கவே இல்லை. இதற்குக் காரணம், புரட்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு கட்சிக்காரர்களும், அவனைப் பொறுத்தவரை மூன்றாம் நபர்கள்தான்.

இதே புரட்சியை, கோர்ஸிகாவிலும் அறிமுகப்படுத்தினால் என்ன என்று யோசித்தான் நெப்போலியன். அங்கேயும் இதே பிரெஞ்சு அரசாங்கம்தானே? பிரான்ஸ் மக்களால் தங்களுடைய அரசாட்சியைத் தூக்கி எறியமுடியுமானால், கோர்ஸிகா மக்களால் முடியாதா என்ன?

இதைப்பற்றி மேலும் யோசிக்க யோசிக்க, நெப்போலியனுக்குள் நம்பிக்கை பெருகியது. பிரெஞ்சுப் புரட்சியை கோர்ஸிகா வரை நீடிக்க முடியும், தன்னுடைய தேசத்திலும் இப்படி ஒரு மாற்றத்தைக் கொண்டுவரமுடியும் என்று உறுதியாக நினைக்கத் தொடங்கினான்.

> தன்னுடைய தாயகமான கோர்ஸிகாவை ஆக்கிரமித்திருக்கிற பிரெஞ்சு அரசாங்கத்தின் கீழ் வேலைக்குச் சேர்வதில் நெப்போலியனுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. 'இந்த வாள் பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமானது. ஆனால், இதன் கூர்மை எனக்குச் சொந்தமானது' என்று நினைத்துக்கொண்டான் அவன்.

நெப்போலியன், இராணுவப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய தந்தை கார்லோ போனபார்ட் மரணமடைந்திருந்தார். வீட்டின் மூத்த மகன் ஜோசப் இன்னும் சம்பாதிக்கத் தொடங்கவில்லை. ஆகவே, அந்தப் பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நெப்போலியன் தலையில் விழுந்திருந்தது. புரட்சி, புடலங்காய் என்று யோசித்து, இருக்கின்ற இராணுவ வேலையையும் விட்டு விட முடியாது.

ஆகவே, தன்னுடைய புரட்சி நோக்கங்களை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல், 'உடம்பு சரியில்லை' என்று லீவு போட்டுவிட்டு, கோர்ஸிகாவுக்குக் கிளம்பினான்.

## நெப்போலியனின் பின்னால் கோஸிகர்கள் அணிதிரண்டனர்

கோர்ஸிகாவில், பயோலி தலைமையிலான சுதந்திரப் போராட்டம் இன்னும் நடந்துகொண்டிருந்தது. அந்தப் படையில் தன்னையும் ஆர்வத்தோடு இணைத்துக்கொண்டான் நெப்போலியன்.

அப்போது பயோலிக்கு வயது, அறுபதைத் தாண்டியிருந்தது. அத்தனை ஆண்டுகளாகத் தொடர்ந்து இத்தாலியர்களோடும் பிரெஞ்சுக்காரர்களோடும் சண்டையிட்டதில், மிகவும் தளர்ந்து போயிருந்தார் அவர். முழுச் சுதந்திரம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, பிரெஞ்சு அரசாங்கத்தின்கீழ் கோர்ஸிகா தனித்து இயங்குகிற உரிமையைக் கொடுத்தால்கூட போதும் என்கிற மனோநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

ஆனால், நெப்போலியனுக்கு இதில் கொஞ்சமும் சம்மதம் இல்லை. அரைகுறைச் சுதந்திரமெல்லாம் யாருக்கு வேண்டும்? பிரெஞ்சுக்காரர்களை மொத்தமாக வெளியே துரத்திவிட்டு தான் மறு வேலை என்று துடித்தான்.

'தம்பி, நீ பிறப்பதற்கு முன்னாலிருந்தே, இதையெல்லாம் நான் முயன்று பார்த்துவிட்டேன், நம் முடைய பருப்பு இங்கே வேகாது' என்று நெப்போலியனுக்குப் பொறுமையாக எடுத்துச் சொல்ல விரும்பினார் பயோலி. ஆனால், அதையெல்லாம் கேட்கிற நிலைமையில் நெப்போலியன் இல்லை.

மாபெரும் பிரெஞ்சு சாம்ராஜ்ஜியத்திடம் பயிற்சி பெற்றவன் அவன். அதே பயிற்சியைப் பயன்படுத்தி, அவர்களை முறியடிக்கப்போகிறான், கோர்ஸிகாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தரத்திட்டமிட்டான்.

கோர்ஸிகாவில் எத்தனை பிரெஞ்சுப் போர் வீரர்கள் இருக்கிறார்கள், அவர்களை முறியடிக்க வேண்டுமானால் நாம் எவ்வளவு பெரிய படையைத் திரட்ட வேண்டியிருக்கும், அவர்களோடு எங்கே போரிடுவது நமக்கு நல்லது, பிரான்ஸிலிருந்து கூடுதல் படைகள் வந்தால், அவற்றைத் தடுத்துச் சமாளிப்பது எப்படி என்று பல கோணங்களில் சிந்தித்து, மனத்துக்குள் போர் நடத்திப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனுடைய இந்தத் தலைமைப் பண்பு, பயோலிக்குப் பொருந்தவில்லை. ஆகவே, நெப்போலியனின் பிடிவாதத்தைக்காட்டிலும் மிக மெதுவாகவே பிரான்ஸ் ஆக்கிரமிப்புக்கு எதிரான படையைத் திரட்ட முடிந்தது.

இதற்குள், நெப்போலியனின் விடுமுறை முடிந்து விட்டது. ஆகவே, அரை மனத்தோடு பிரான்ஸுக்குத் திரும்பினான் அவன்.

அங்கேயும் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பிரான்ஸ் தெருக்களில் தினந்தோறும் அரங்கேறுகிற புரட்சிக் காட்சிகளைப் பார்க்கையில், அவனுக்குக் கோர்ஸிகாவின் நினைப்பு தான் வந்தது. உடனே மீண்டும் லீவு, மீண்டும் கோர்ஸிகா. இப்படி பிரான்ஸுக்கும் கோர்ஸிகாவுக்கும் நடுவே டிக்கெட் வாங்காத குறையாக அடிக்கடி பயணம் செய்துகொண்டிருந்தான். கொஞ்சக் காலம் போர் வீரன், மிச்ச நேரம் புரட்சிக்காரன் என்கிற 'இரட்டை வேடம்' அவனுக்குக் கச்சிதமாகப் பொருந்தியது.

சாதாரணமாக, படை வீரர்களில் யாரேனும் இப்படி அடிக்கடி விடுமுறையில் சென்றால், அவர்களுக்கு நிரந்தரமாக சீட்டுக் கிழித்துவிடுவார்கள். ஆனால், அதிர்ஷ்டவசமாக, நெப்போலியனின் நீண்ட விடுமுறைகளையெல்லாம் கவனித்து விசாரிப்பதற்கு, அப்போது பிரெஞ்சு இராணுவத்தில் யாருக்கும் நேரம் இல்லை.

ஆகவே, 1786-ம் ஆண்டில் தொடங்கி, 1792 வரையிலான ஆறு வருடங்களில் பெரும்பகுதியை கோர்ஸிகாவில்தான் கழித்தான், கொஞ்சம் கொஞ்சமாக உள்ளூரிலும், சுதந்திரப் போராளிகள் மத்தியிலும் அவனுக்கு ஆதரவு பெருகிக்கொண்டிருந்தது.

இதனால், பழைய தலைவர் பயோலிக்கும், புதிய பிரபலமான நெப்போலியனுக்கும் இடையே விரிசல் உண்டாகியது. முறைப்படி இராணுவப் பயிற்சி பெற்ற நெப்போலியனின் தலைமையை ஏற்று பல கோர்ஸிகர்கள் அணி திரண்டார்கள். இதை பார்த்து, இருவருடைய ஆதரவாளர்களும் பிரிந்து, தனித்தனியே இயங்கத் தொடங்கினார்கள்.

(தொடரும்)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கரடி அவன் மீது ஆவேசத்துடன் பாய்ந்தது. அவன் மண்டையில் அடித்து மண்டை ஓட்டைப் பிய்த்து விட்டது. அவன் உடலை நகத்தால் விறாண்டி இரத்தக் களமாக்கிற்று. வெறி தலைக்கேறிய கரடி தன் பலம் பொருந்திய முன் கால்களால் அவனைத் தூக்கி, கோரப் பற்களால் கவ்விக் கொண்டு பள்ளத்திலிருந்து மேலே வந்தது.**

# கரடி வாயில் அகப்பட்ட சிறுவன்

**உண்மைச் சம்பவம்**

**ம**ழை வெள்ளத்தால் அரிக்கப்பட்ட பள்ளம். ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாத அந்தப் பள்ளத்தில் மூன்று சிறுவர்கள் மரத்தால் ஒரு சிறுவீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் விளையாட்டில் ஈடுபட்டிருந்த பள்ளத்திற்கு மேல் பக்கம் அடர்த்தியான காடு. பகலையும் இருட்டாக்கும் பெரிய நீண்ட மலைப் பிரதேசம். அதன் அடிவாரத்தில் அச்சிறுவர்களின் கிட்டிமார்ட் கிராமம். அக்கிராமம் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்தது.

மரவீட்டை உருவாக்கி முடிப்பதிலேயே சிறுவர்கள் மூவரும் கவனமாகவும், ஆர்வமாகவும் இருந்தனர். அப்போது பெரிய பயங்கரத் தோற்றமுடைய கறுப்புக் கரடி ஒன்று காட்டிலிருந்து சிறுவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. இது அப்பாவிச் சிறுவர்களுக்குத் தெரியாது.

சிறுவர்கள் மூவரும், குதூகலத்துடன் சந்தோச ஆரவாரம் செய்து கொண்டும், மரப் பலகையில் ஆணி அடித்து ஓசை எழுப்பிக் கொண்டும் இருந்ததால் வரப்போகும் அபாயத்தை உணரவில்லை.

அம் மூன்று சிறுவர்களில் ஒருவன் மட்டும் ஆத்திரத்துடன் ஓடி வரும் கரடியைப் பார்த்து விட்டான்.

அலறியடித்துக் கொண்டு அவனும் மற்றொரு பையனும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்கள். பாவம் பத்துவயது ரொறிங்ரன் தான் அகப்பட்டுக் கொண்டான்.

ரொறிங்ரன், அதிர்ச்சியில் கையிலிருந்த சுத்தியலைக் கீழே போட்டான். கரடியின் கோரப் பிடியிலிருந்து தப்பிக்க ஓட முயன்றான். கரடி அவன் மீது ஆவேசத்துடன் பாய்ந்தது. அவன் மண்டையில் அடித்து மண்டை ஓட்டைப் பிய்த்து விட்டது. அவன் உடலை நகத்தால் விறாண்டி இரத்தக் களமாக்கிற்று.

வெறி தலைக்கேறிய கரடி தன் பலம் பொருந்திய முன் கால்களால் அவனைத் தூக்கி, கோரப் பற்களால் கவ்விக் கொண்டு பள்ளத்திலிருந்து மேலே வந்தது.

சில மீட்டர்கள் தூரத்தில் அக்காட்டில் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்யும் 35 வயதான மார்க்கசின் மரவீடு இருந்தது. கதவு திறந்திருந்த அந்த வீட்டின் வாசலில் மார்க்கஸ் நின்றிருந்தான். உயிர் தப்ப ஓடிய இரு சிறுவர்களினதும் கூக்குரலைக் கேட்டு அவனது துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். குரல் வந்த திசையில் ஓடினான்.

அடர்ந்த மரங்கள் நிறைந்த பகுதியை அடைந்தான். அப்போது அவனுக்குப் பின்னால் யாரோ ஓடிவரும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அவன் பக்கத்து வீட்டுக் காரப் பெண்மணி வந்து கொண்டிருந்தாள்.

அவள்தான் கரடியின் பிடியில் அகப்பட்டு உயிருக்காக மன்றாடிக் கொண்டிருக்கும் ரொறிங்ரனின் தாயார். அவர்கள் இருவருக்குமே, உதவிக்காக யார் கூக்குர லிடுகிறார்கள் என்று அறவே தெரியாது. ரொறிங்ரனின் தாயாரை நோக்கி மார்க்கஸ் கையாட்டினான். ஆனால் அவள் அதைக் கவனியாது, முன்னால் நடந்து கொண்டே இருந்தாள்.

காட்டுப் பகுதியிலிருந்து அறுபது அடி தூரம் மார்க்கஸ் சென்றிருப்பான். அப்போது பள்ளத்திலிருந்து சினிமாக்களில் வரும் பயங்கர மிருகத்தைப் போல வாயில் சிறுவனைக் கவ்விக் கொண்டு கரடி மேலே வந்து கொண்டிருந்தது.

நிலைமையைப் புரிந்துகொண்டான் மார்க்கஸ். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் சிறுவனுக்கு ஆபத்தெனப்புரிந்து கொண்டான். மார்க்கஸ் துப்பாக்கியைத் தூக்கிக் குறிபார்த்தான். ஓர் ஆண்டிற்கு முன்தான் மார்க்கஸ் துப்பாக்கி வாங்கியிருந்தான். இதுவரையில் ஒரு சில தடவைகளே அதனால் சுட்டிருக்கிறான். இப்பொழுது ஒரு சிறுவனின் உயிர் மார்க்கஸ் குறிபார்த்துச் சுடுவதில் தான் தங்கியுள்ளது.

சுமார் பத்து அடி தூரத்திற்குள் கரடி வந்து விட்டது. மார்க்கஸ் சிந்திக்காமல் துப்பாக்கியால் சுட்டான். அதன்பிறகு நடந்தது மார்க்கசுக்கு அற்புதமானதாகத் தோன்றியது.

கரடியின் கழுத்தில் குண்டு பாய்ந்திருந்தது. மறுகணம் கரடி கீழே சாய்ந்து உயிரைவிட்டது. வெடிச்சத்தம் கேட்டதுமே கரடி சிறுவனைக் கீழே போட்டுவிட்டது. கரடி சாய்ந்ததும், ஒரே சமயத்தில் மார்க்கசும், பையனின் தாயாரும் கீழே விழுந்து கிடக்கும் பையனை நோக்கி விரைந்தார்கள்.

ஆயினும் மார்க்கசுக்குக் கரடி இறந்துவிட்டதில் சந்தேகம். அவன் சுட்டதில் கரடி காயமடைந்திருக்கலாம். அது எங்கே மீண்டும் எழுந்து வந்துவிடுமோ என்று மேலும் இரு தடவைகள் கரடியின் தலையை நோக்கிச் சுட்டான்.

அதே சமயம், கிராமத்திலிருந்து பலர் உதவிக்காக அங்குவந்தனர். சிறுவனை மார்க்கஸ் மெல்லத் திருப்பினான். பையன் சுயநினைவிழந்த நிலையில் இருந்தான். கரடியின் தாக்குதலால் ஏற்பட்ட அதிர்ச்சி அவனுக்கு இன்னமும் தெளியவில்லை.

மண்டை ஓட்டின் ஒரு துண்டு பெயர்ந்து போயிருந்ததால் தலைப் பகுதி முழுவதும் இரத்தக் காயமாகவிருந்தது. உடலின் பல பாகங்களில் கரடியின் நகங்களால் விறாண்டப்பட்டு இரத்தக்காயங்கள் ஏற்பட்டிருந்தன. சில இடங்களில் கரடியின் பற்கள் ஆழப் பதிந்திருந்தன.

பையனுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. அவன் உடலைக் கம்பளிப் போர்வையில் சுற்றினார்கள். ரொறிங்ரனின் பெயர்ந்த மண்டை ஓடு எங்கே என்று மார்க்கஸ் தேடத் தொடங்கினான்.

சிலர் கரடியின் வாயில் பையனின் மண்டை ஓட்டின் பாகம் இருக்குமோ என்று கருதி, அதைக் கத்தியால் கிழித்துப் பார்த்தனர்.

இறந்த கரடியின் சடலத்திற்கு முப்பது அடி தூரத்தில் பையனின் மண்டை ஓட்டுத் துண்டு கிடந்தது. மண்டை ஓட்டையும் பையனையும் எடுத்துக் கொண்டு அனைவரும் மருத்துவமனைக்கு விரைந்தனர். மருத்துவமனையில் மருத்துவர்கள் மண்டை ஓட்டைப் பொருத்தித் தையல் போட்டார்கள்.

கிராமத்தவர்கள் சிறுவனைக் காப்பாற்றியமைக்காக மார்க்கசைப் பாராட்டினார்கள். சரியான சமயத்தில் அவன் கரடியைச் சுட்டிராவிட்டால் பையனைக் காப்பாற்றியிருக்கவே முடியாது என்று பலரும் சொன்னார்கள்.

"எனக்கு சிந்திப்பதற்கு நேரமில்லை. கரடி வாயில் கௌவ்விய பையனை ஆக்ரோஷத்துடன் வந்ததைக் கண்டதுமே சிறுவனை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கியது. குறிபார்த்துச் சுட்டதாகவே நினைக்கிறேன். என்னுடைய அதிர்ஷ்டம்தான் குண்டு கரடியைக் கொன்று விட்டது" என்றான் மார்க்கஸ்.

துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டு ஓடி வந்தவர்களில் மலைவாசிகளும் சிலர் இருந்தனர். அவர்களில் ஒருவன் "சிறுவன் மீது குண்டு பாயாது, கரடியை மட்டும் தாக்கும் விதத்தில் குறிபார்த்துச் சுட்டது அற்புதமானது" என்று மார்க்கஸ் சுட்ட விதம் குறித்துக் கூறினான்.

மருத்துவமனையில் ரொறிங்ரனுக்கு ஓர் வருடத்தில் மூன்று தடவைகள் பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சில நாட்களிலேயே அவன் எழுந்து நடக்கத் தொடங்கினான். சில வாரங்களின் பின் பாடசாலை செல்ல ஆரம்பித்தான். ஆனால் அவன் ஆயுள் முழுவதும் தலையில் செயற்கை முடியை அணிய வேண்டி நேரிட்டது. ஏனெனில் தலையில் மண்டையோடு வைத்துத் தைக்கப்பட்ட பகுதியில், தலைமயிர் அறவே வளரவில்லை.


அதேபோன்று மார்க்கசும் கரடியைச் சுட்டதன் பின்பு துப்பாக்கியை ஏனோ தொடவே இல்லை. ★

■ தமிழில் ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தான் வாழ்க்கை!



வாழ்க்கையின் முக்கியமான கட்டங்கள் ஒரு சிறிய புகைப் படத்திலேயே அடக்கப்பட்டுள்ளது.

சிறு வயதிலிருந்து வளர்ந்து பெரியவர்களாகி இறக்கும் வரையான காலப்பகுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இடைப்பட்ட காலப்பகுதிக்குள் மனிதன் போடும் ஆட்டங்கள் தான் எத்தனை?

வாழ்க்கையின் மிக நீண்ட காலப் பகுதி ஓர் சிறிய படத்துக்குள் அடைக்கப்பட்டுள்ளமை சந்தோசம் அளிக்கும் விடயமாக உள்ளது.


வாழ்க்கையை ரசித்து வாழுங்கள் இன்னும் அழகாகும்.

## கடலுக்கடியில் 1000 அடி ஆழத்தில் அற்புதக் கண்காட்சிக் கூடம்!









பல வருடங்களாக கடலுக்கடியில் [illegible] கண்காட்சிக்கூடமாக மாற்றியிருக்கிறார்கள். அமெரிக்க கடற்படையினர் புளோரிடா கடற்கரையில் [illegible] அதிக கற்கள் நிறைந்த [illegible] கொண்டது.

இதன் காரணமாக தரை தட்டிய கப்பலின் இந்த [illegible] உருவாக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு US Navy [illegible] 525 அடி ஆழமுள்ள கண்காட்சியகம் இன்னமும் முதலிடத்தில் உள்ளது.

அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் மக்கள் பார்வைக்கு விடப்படவிருப்பதுடன் கடலுக்கடியில் வந்து போவதற்கு சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.


**Sudar Oli**

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch



Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிலிருந்து விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யவும்.

www.progresso-lehrgang.ch

Hotel & Gastro formation | Eichstrasse 20 | 6353 Weggis
Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், கவிதஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கைபடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி படிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.


தொடர்புகளுக்கு ஜெயந்தி மகேஸ்வரர்,

இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில்



10 மொழி அகராதி

Sprache wörterbuch

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## ஆராரிரோ....



வறுமையைச் சுமந்து
வாழ்ந்திருக்கிறாய்
கவிதையைச் சுமந்து
கலையாகியிருக்கிறாய்
இசையைச் சுமந்து
இசையாகியிருக்கிறாய்
உணர்வைச் சுமந்து
உன்னதமாகியிருக்கிறாய்
வேதனையைச் சுமந்து
விருட்சமாகியிருக்கிறாய்
குழும்பைச் சுமந்து
குளமாகியிருக்கிறாய்
இதெல்லாம்
என்னைச் சுமந்த அந்த
பத்துமாத ப[illegible]கைள்
ஆனால்
உன்னைச் காக்க
இந்த ஏழைக் கவிஞனிடம்
கவிதையொன்று தான்
இருக்கிறது

- நெடுந்தீவு க.யோகேஸ்
யாழ்ப்பல்கலைக்கழகம்.




ஒற்றைத் தரம்கூட
நேரில் வந்து
உன் காதலைச்
சொல்லாத நீ
நான் கண்கள் மூடியதும்
அக்கணமே என் விழியருகே
வந்து விடுகின்றாயே
இப்போது மட்டும்
நான் அழையாமலே
வரும் நீ... என்ன
அம்மா அப்பா
அனுமதி பெற்றாயா?
அடி பெண்ணே
காதலுக்கு கண்ணில்லை
என்பதலா நீ
என் கண்களை
மூடச் சொல்கிறாய்
உன் காதலைச்
சொல்வதற்கு!

-ஜோஸ்வா ஜெசி
மன்னார்.




தொலையாத எம் சபலங்கள்
தொடர்வதனால்
நீண்டுபோன
என் துயரங்களும்
தொலைய மறுக்கின்றன

எனது தொலைவுகளில்தான்
உனது தேடல்களும்
விம்மல்களும்
கண்ணீர் சொரிகின்றன

நான்
நாதியற்றுப் போனதால்
எனக்குள் குமுறும்
உணர்வுகளும்
உத்வேகங்களும்
வெறும் ஜடங்களாகவே
உள்வாங்கப்படுகின்றன

ஏக்க சுமைகளை
சுமந்து சுமந்து
என் உயிர்ப்பும் உணர்வும்
ஊனமாகிப் போனது

வேறுபடுத்தப்படாத
என் வேட்கைகளின் தாகம்
என்றோ ஒருநாள்
விறு கொண்டெழும்
புதிய வார்ப்பாக...

- க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.


## அன்னையே என் தெய்வம்

ஆண்டவன்
ஆயிரமாயிரம் வரம் தந்தாலும்
அன்னை நீ அன்பில் இமயம்
ஆயுள்வரை சிறையிருப்பினும்
அழிவதில்லை அம்மா உன் திருவுருவம்
ஆறறிவு மனிதர்க்கெலாம் ஓர் இடத்தில்
இதயம் உண்டு இதயமதில்
கருணை நிறைந்த
உள்ளமே தாய் உள்ளம்
அன்னையர் தினத்துக்கு
வருடத்தில் ஒருநாள்
மகுடம் சூட்டலாம் ஆனால்
மடியிலும் மார்பிலும் தாங்கிய
உன்னை தினம் தோறும்
இதயத்தில் வைத்து
அஞ்சலி செய்கின்றோம்



- எம்.ஆர்.சுலிபன்
அரிநொளி வி.

## உயிரே பிரியாதே...



காலங்கள் முடிந்தன
கவலைகள் நிறைந்தன
நினைவுகள் நின்று
கனவுகள் தொடர்ந்தன

நீ நின்ற இடங்களில்- உன்
நிழல் கூட எஞ்சவில்லை
என் இதயத்தில்- உன்
முகம் தவிர எதுவுமில்லை

உன்னைக் கண்ட நாள்- என்
பிறந்தநாளாய் மாறியது ஏனோ?
உன் பிரிவு நாள்- என்
இறுதி நாளாய் தெரிவதும் ஏனோ?

உறவுகள் பிரிந்தால்
உறக்கத்தை தொலைக்கலாம்
உயிரே பிரிந்தால்
எதைத் தொலைப்பது?

- சுதுமலை நளா.

## சொல்லும் செயலும் நன்மையாக வேண்டும்



சொல்லும் செயலும்
சுபீட்ச முடையதாக
சோபிக்க வேண்டும்!

சுகாதார சேவைகள்
தொடர்ந்து
நாடெங்கும் விரிவடைய
நடவடிக்கை எடுக்க வேண்டும்!

தங்கு தடையின்றி
தமிழர் பிரச்சினைக்கு
தகுந்த தீர்வை
பரிந்துரைக்க வேண்டும்!

காலத்தைக் கடந்தும்
கோலத்தைக் கைவிட்டு
உறவு பாலத்தை அமைக்க
பெரும்பான்மைச் சமூகம்
சிறுபான்மையினரோடு
சினேக பூர்வமாக
செயற்பட வேண்டும்!

- சேனையூரான்.
மூதூர் [illegible] மன்னார்.

## நிமிடமொரு தடவை பூக்கும் பூக்கள்

ஒவ்வொரு பூக்களுமே
ஓரே...
ஒரு முறைதானே
மலர்ந்து கொள்கிறது

பூக்கள்...
பூத்திடும் ஓசைகள்
காதில் விழாதென்ற
கதைகளை எல்லாம்
பொய்யாக்கி விடுகிறது
பூவையுன் சிரிப்பு

பூத்திடும் பூக்களுக்கு
ஒருவேளை ஓசையிருந்தாலும் உன்
புன்னகையின் ஓசையை
ஜெயித்திடுமோ அது

- யோ.யூட்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த வாழ்க்கையில் தலையிடகூடாது !



தற்போது மலையாளத்தில் டாக்டர் பைஜூ இயக்கும் படத்தில் நடித்து வருகிறேன். 'முப்பொழுதும் உன் கற்பனைகள்' படத்துக்காக அமெரிக்கா செல்கிறேன். டைரக்டர் விஜய்யுடன் காதல், நெருக்கமாக பழகுகிறார் என்று என்னைப் பற்றி செந்திகள் வருகிறது. நீண்ட நாட்களாக இந்த பேச்சு இருந்து வருகிறது. மீடியா என் படங்களைபற்றி, அதில் எனது நடிப்பு குறித்து மட்டும் பேசட்டும். சொந்த வாழ்க்கையில் தலையிடுவதை ஏற்க முடியாது. இவ்வாறு அமலாபால் கூறினார்.

# காட்டுப்புலி பாடல் வெளியீடு!

பிரபல பாலிவுட் சண்டை இயக்குனர் டினு வர்மா தயாரித்து இயக்கி உள்ள படம் 'காட்டுப் புலி', அர்ஜுன், ஷாயாலி பகத் நடித்துள்ளனர். விஜய் வர்மா இசை. இதன் பாடல் வெளியீடு சென்னையில் நடந்தது.





# இரு கதாநாயகிகள் நடிப்பது தவிர்க்க முடியாது : சுஜா

கே.எஸ்.அதியமான் இயக்கத்தில் 'அமளி துமளி'. படத்தில் நடிக்கும் சுஜா கூறியதாவது: இதில் பேங்க் மேனேஜராக வருகிறேன். யாரும், யாருக்கும் ஜோடி கிடையாது. நாங்கள் செய்துள்ள கொமடி ரசிகர்களை சிரிக்க வைக்கும். இதில் எனக்கு பாடல் காட்சி இல்லை. வழக்கமான நடனமும் இருக்காது. இப்போது வரும் படங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஹீரோயின்கள் நடிப்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. இதனால், இரு ஹீரோயின்களில் ஒருவராக நடிப்பது பற்றி கவலைப்படவில்லை.



# பாணி இல்லாததுதான் என் பாணி: சுசீந்திரன்!

சுசீந்திரன் இயக்கும் 'ராஜபாட்டை' படத்தில் விக்ரம், 14 கெட்டப்புகளில் வருகிறார். அடுத்து தமிழ், தெலுங் கில் 'வீர தீர சூரன்' படத்தை இயக்குகிறேன். தமிழில் விஷ்ணு ஹீரோ. இது கொமடி படம். இதற்கு முன் இயக்கிய 'வெண்ணிலா' 'கபடிக் குழு', 'நான் மகான் அல்ல', 'அழகர் சாமியின் குதிரை' ஆகிய படங்கள் ஒரே பாணியில் இருந்திருக்காது. அதுபோல், முற்றிலும் மாறுபட்ட ஸ்டைலில் ராஜபாட்டை இருக்கும். தனிப்பட்ட பாணி இல்லாததே என் பாணியாக இருக்கும் என்றார் சுசீந்திரன்



# எங்களால் எதுவும் முடியும் சான்ஸ் கொடுத்து பாருங்க -தீக்ஷா சேத்தின் ஆசை!

சிம்புவுடன் 'வேட்டை மன்னன்' படத்திலும் நடித்து வருகிறார் தீக்ஷா சேத். 2009 ல் மிஸ் இந்தியா போட்டியில் இறுதிவரை முன்னேறிய தீக்ஷாவுக்கு ஒரு விஷயம்தான் இன்னும் அலுப்பாக இருக்கிறதாம். ஹீரோயின்கள் என்றாலே அவர்கள் டூயட்டுக்குதான் லாயக்கு என்று நினைத்துவிடுகிறார்கள். எங்களுக்கும் பைட் சீன்ல வில்லன்களை புரட்டி எடுக்கிற மாதிரி சான்ஸ் கொடுக்கலாம் என்றார்.

# விமர்சனம்





தற்காப்பு கலை, மருத்துவம் என பல கலைகளில் புகழ் பெற்றவன் பல்லவ மன்னர்களில் ஒருவனான போதிதர்மன். அவன் சீன நாடு சென்ற போது, அங்கு கொடிய வியாதினால் மக்கள் இறக்கின்றனர். அவர்களைக் காப்பாற்றி, அவர்களுக்கு மருத்துவமும், எதிரிகளை வீழ்த்த தற்காப்பு கலையும் என கற்றுக்கொடுக்கிறான். அவரது புகழ் நாடு கடந்து பேசப்படுகிறது. அவரது கடைசி காலத்தை கழிக்க காஞ்சிபுரம் திரும்ப முடிவெடுத்தபோது, இந்த கலைகள் மற்ற நாடுகளுக்கு பரவக் கூடாது என்று உணரும் சீன நாட்டினர், அவருக்கு உணவில் விஷம் வைக்கின்றனர். அவர்களின் தவறை மன்னித்து, அவர்களுக்காகவே அங்கு உயிர் துறக்கிறார் போதிதர்மன். அவரது உடலை அங்கு அடக்கம் செய்வதோடு, அவருக்கு கோவில் கட்டி வழிபடுகின்றனர். தமிழ் நாட்டில் ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவி சுபா, போதிதர்மனின் வரலாற்றை ஆராய்ந்து வியக்கிறார். அவன் வாழ்ந்த பகுதியில் சென்று அவனது வம்சாவழி இரத்தத்தை சோதித்து அதே மரபணு உள்ள ஒரு இளைஞனை கண்டு பிடிக்கிறாள். அவனை காதலிப்பது போல நடித்து, அவனது ஆராய்ச்சிக்கு பயன் படுத்த முயற்சிக்கிறாள். இந்திய நாட்டில் கொடிய வியாதியை உருவாக்கி, அதற்கு மருந்து தேடி தன் நாட்டிடம் கையேந்த வைக்கவும், அதன் மூலம் இந்தியாவை அடிமையாக்க நினைக்கும் சீனா, போதிதர்மன் பற்றிய ஆராய்ச்சி செய்யும் மாணவியை ஒழித்து கட்டவும், எல்லா திறமையையும் கொண்ட ஒரு இளைஞனை இந்தியாவுக்கு அனுப்புகிறது.

போதிதர்மனின் வாரிசுக்கு அவள் தன்னிடம் காட்டுவது காதல் அல்ல, சோதனை என்று தெரிய வரும் போது அதிர்ந்து போகிறான். சர்வ வல்லமை பொருந்திய அந்த சீன நாசக்காரனை எதிர்க்க, சுபா தரும் ஆராய்ச்சிக்கு உதவுவதோடு, அந்த சீன இளைஞனால் நடக்க இருந்த ஆபத்துகளை முறியடித்து வெற்றி கொள்கிறான்

போதிதர்மன் என்ற துறவி, சர்க்கஸ் கலைஞர் என இரண்டு வேடங்களில் நடித்து இருக்கிறார் சூர்யா. போதிதர்மனாக அறிமுகமாகிற காட்சியில் வியக்க வைக்கிறார் சூர்யா. முறுக்கேறிய உடம்பு, மிரள வைக்கும் பார்வை, பதறவைக்கும் பைட் என அபாரமான திறமைகளை வெளிப்படுத்தி அந்தப் பாத்திரத்துக்கு வலிமை சேர்க்கிறார்.

அதே போல சர்கஸ் கலைஞனாக ஆடிப் பாடி, காதல் கொண்டு விளையாட்டு பிள்ளையாகவும் கலக்குகிறார். பிறகு வில்லனை கண்டு அதிர்ந்து, அவனை கண்டு ஓடும் போது சராசரி இளைஞனாக பளிச்சிடுகிறார். தம்பி பிரபாகரன் போல திருப்பி அடிப்பேன் என்று உரக்க பேசுகிறபோது உரமேற்றுகிறார். சண்டைக்ககாட்சியிலும், நடனத்திலும் அவரை அடிச்சுக்க முடியாது என்கிற அளவுக்கு அவரது திறமை பளிச்சிடுகிறது. ஆராய்ச்சி மாணவி சுபாவாக வரும் ஸ்ருதி, புலிக்கு பிறந்தது பூனையாகாது என்பார்களே அதேபோல கமல் மகள் என்பதை நினைவு படுத்துவதோடு, அந்தப் பாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். சீன இளைஞராக வரும் Johnny Tri Nguyen, அடேங்கப்பா அதிரடி மிரட்டல்தான். அவரது பார்வையும், பைட்டும் பதற வைக்கிறது.

ஒவ்வொரு பிரேமையும் வியக்க வைக்கும் அளவிற்கு படமாடக்கி இருக்கிறார் ஒளிப்பதிவாளர் ரவி கே. சந்திரன். பாடல் இசையிலும், பின்னணி இசையிலும் பிரமாதப்படுத்துகிறார் ஹரீஸ் ஜெயராஜ். இன்னும் என்ன தோழா என்கிற பாடலில் மனதில் தைரியமூட்டுகிறார். செல்லவேலமா பாடலில் இளமை துள்ளல். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த போதிதர்மன் என்ற துறவிக்கு சீனாவில் கோவில் கட்டி சாமியாக வணங்கி வந்ததையும். அவரது வாழ்க்கையை தற்காலத்தில் நடக்கும் ஒரு கதையுடன் இணைந்து படமாக்கி இருக்கிறார் இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ். படமாக்கிய விதமும், கதை சொன்ன விதமும் பலே.

தமிழனின் வீரம், மருத்துவம், தற்காப்பு கலைகளையும் உலகம் வியக்கும் வண்ணம் நினைவு படுத்தியதற்காக இயக்குநரை தோள்களில் தூக்கி வைத்து கொண்டாடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...க படங்களில் நடிக்காதது ஏன்?



ஒவ்வொரு இடத்துக்கும் அதிகமாக, பயணம் மேற்கொள்ள ...வண்டியிருப்பதால் அதிக படங்களில் நடிக்க ...லை என்றார் மாதவன். இந்திப் படத்துக்காக ஒரு ...யூல், லொகேஷன் ஏதோ ஒரு நாட்டில் இருக்கும். ...் படத்தின் ஷூட்டிங் இங்கு ஏதோ ஒரு கிராமத்தில் ...தும். இதற்காக அதிக பயணம் மேற்கொள்ள வேண்டி...க்கிறது. அங்கு இங்கு என்று அலைவதை விரும்ப...ில்லை. அதனால் ஒரு நேரத்தில் ஒரு படத்தை மட்டுமே ஒப்பு க்கொள்கிறேன். இவ்வாறு மாதவன் கூறினார்.

## நல்லது-கெட்டது இளமை-முதுமை...




இப்படி வெவ்வேறு எல்லைகளில் இருக்கும் இரண்டு பெண்கள் சந்தித்தால்? இனிய இசை எழும் என்று சொன்னால் நம்புவீர்களா? இரண்டாம் உலகப் போர் காலக்கட்டத்தில் தொடங்கி இன்றுவரை பியானோ கற்றுத்தரும் வயதான இசை ஆசிரியை ட்ராடு. மகளிர் சிறையில் கொலைக் குற்றத்துக்காக அடைக்கப்பட்டுக் கிடக்கும் இளம்பெண் ஜென்னி- இவர்களே அந்த இருவர். சுவாரஸ்யமான ரகசியங்களும் கருமேகங்களும் சூழ்ந்த இவர்களைச் சுற்றிச் சூழும் கதைதான் 'விர்மினுட்டன்' (நான்கு நிமிடங்கள்) என்ற ஜேர்மன் படம்.

இளம் வயதிலேயே ஒருவனை படுகொலை செய்துவிட்டு சிறைக்கு வந்திருப்பவள் ஜென்னி. இயல்பிலேயே கோபமும் வன்முறையும் கொண்டவள். அந்த புதிய கைதிக்கு இசை கற்றுத்தர மறுக்கிறார் 80 வயது ஆசிரியை. அடாவடி செய்தாலும் அந்தப் பெண் ஒரு மேதை... அபூர்வமான இசைத் திறமை கொண்டவள். இந்த விஷயம் ஆசிரியைக்குத் தெரிய வருகிறது. ஜென்னிக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்குகிறார். மிக முக்கியமான பியானோ போட்டியில் அவளைப் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்பது ஆசிரியையின் கனவு.

**பிறமொழித் திரைப்படம்**

சிரமங்களைப் பொறுத்துக் கொண்டு பயிற்சியை தொடர்ந்து அளிக்கிறார் அவர். இசை என்ற இன்ப வெள்ளத்தினால் இருவருக்கும் நேசம் பிறக்கிறது. ஒரு கட்டத்தில் கைதிப்பெண்ணின் வன்முறை அதிகமாக. அவளை போட்டிக்கு அனுப்ப மறுக்கிறார்கள்.

ஆனால் ஜென்னியை சிறையிலிருந்து திருட்டுத்தனமாக விடுவித்துச் சென்று போட்டில் பங்கேற்கச் செய்கிறார் ஆசிரியை. ஜென்னியின் 4 நிமிட இசை மழையில் அதிசயித்துப் போகிறார்கள் அத்தனை பேரும். படம் பார்க்கிறவர்களும்தான்! அதன்பின் போலிஸ் சூழ மீண்டும் கைதியாகிறாள். ஆசிரியை-மாணவி, கைதி-காவலாளி, அந்த காலம்-இந்தக் காலம் என பல முரண்பட்ட விஷயங்களுக்கு இடையேயான உறவுகள் நேர்த்தியாகச் சொல்லப்பட்டிருக்கிறது இந்தப் படத்தில்.

கிட்டத்தட்ட த்ரில்லர் போல இயக்கப்பட்டிருக்கும் இதன் பிற்பகுதியில் நிறைய சர்ப்ரைஸ்கள் காத்திருக்கின்றன. ஜென்னியைப் போல ஆசிரியையும் இளம் வயதில் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார் என்பது உள்பட.

எல்லோரையும் கட்டிப்போட்டு 4 நிமிடங்களின் கதையை எழுதி இயக்கியிருப்பவர் க்ரிஸ் என்ற 43 வயது ஜெர்மன் இயக்குநர். பத்திரிகையாளராகவும் ஓவியராகவும் பணியாற்றிய பிறகு. இவர் ஜெர்மன் பிலிம் டெலிவிஷன் அகாடமியில் சேர்ந்தார். அவரது இரண்டாவது திரைப்படம் இது.



மாணவிக்காக சிரமங்களைச் சந்தித்த இந்த ஆசிரியையின் கதை கோவா. ஷாங்காய் உற்பட பல திரைப்பட விழாக்களில் பலரை நெகிழ வைத்தது. ஆசிரியைக்கும் மாணவிக்கும் ஏராளமான விருதுகள் கிடைத்தன.

## சமந்தாவுடன் நடிக்க ஆசை



இயக்குனர் கௌதம் மேனன் அறிமுகப்படுத்திய நடிகை சமந்தா தமிழில் விண்ணைத் தாண்டி வருவாயா படத்தில் சின்ன கதாபாத்திரத்தில் நடித்தவர். இவர் தெலுங்கு பக்கம் போய் மகேஷ்பாபுவுடன் ஜோடி சேர்ந்து நடித்த 'தூக்குடு' படம் வெற்றியானதால் இதுவரை சமந்தாவை சீண்டாத பெரிய நடிகர்கள் எல்லாம் அவருடன் நடிக்க ஆர்வம் காட்டுகிறார்களாம்.

## சத்தமில்லாமல் விருதுகள் வாங்கிக் குவிக்கிறார் இசைப்புயல்...



பெல்ஜியம் நாட்டில் நடந்த உலக சவுண்ட் டிராக் அகாடமி விருதுகள் 2011 நிகழ்ச்சியில் இசைப்புயல் ஏ. ஆர். ரஹ்மானுக்கு 127 அவர்ஸ் படத்திற்காக 'பப்ளிக் சாய்ஸ்' விருது கிடைத்துள்ளது. ரசிகர்களுக்கு தனது பேஸ் புக் மூலம் நன்றியை தெரிவித்துள்ளார் ஏ. ஆர். ரஹ்மான்.

## ...துக்கு பிடித்த வேடம் ...ந்தால் ஒப்புக்கொள்வேன்



தமிழில் புதிய படம் ஒன்றும் ஒப்புக்கொள்ளவில்லை. அது பற்றி கவலையும் இல்லை. காரணம் நல்ல வேடத்துக்காக காத்திருக்கிறேன். எந்த வே ம் ஏற்க வேண்டும் என் து எனக்கு தெரியும். இப்போதும் எனது வேலையில் பிஸியாகத்தான் இருக்கிறேன். தமிழில் மனதுக்கு பிடித்த வேடம் வந்தால் ஒப் புக் கொள்வேன் என்றார் ஸ்ரேயா.

## கோவணத்துடன் நடிக்கிறார் பிரபல நடிகர் இளவரசு



ஒளிப்பதிவாளராக சினிமாவில் அறிமுகமாகி, வில்லன், குணச்சித்திரம், கொமடி என அத்தனை ஏரியாக்களிலும் கோடம்பாக்கத்தையே கலக்கி வருகிறார் இளவரசு. ராசுமதுரவன் இயக்கத்தில் வெளியான 'முத்துக்கு முத்தாக' படத்தில் கதையின் நாயகனாக நடித்து அசத்தினார். தற்போது 'கொண்டான் கொடுத்தான்' என்ற படத்தில் சிறுவிவசாயியாக நடிக்கிறார். இந்த படத்தில் கோவணத்துடன் இளவரசு, வயலில் ஏர் உழும் காட்சிகளை படமாக்கியிருக்கிறார்.

## கண்டிஷன் போடும் ஆன்டிரியா



'ஒஸ்தி' படத்தை தொடர்ந்து சிம்பு, அடுத்து வெற்றிமாறன் இயக்கத்தில் நடிக்கும், 'வட சென்னை' படத்தில் அவருக்கு ஜோடியாக அமலா பால் நடிக்கிறார். படத்தில் சிம்பு- ராணா இருவருக்கும் சமமான கேரக்டர் தானாம். அதேபோல் அமலாபால், ஆன்டிரியாவுக்கும் சமமான கேரக்டர் தானாம். குறிப்பாக அமலாபால்க்கு இணையான காட்சிகள் இருந்தால்தான் நடிப்பேன் என்று கண்டிஷன் போட்டுதான் நடிக்கவே சம்மதித்தாராம் ஆன்டிரியா. படத்திற்கான வேலைகள் ஆரம்பமாக உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் நடக்க நடக்க மின்சாரம் பிறக்கும்



மின்சாரம் இல்லாத உலகை நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அந்தளவுக்கு நம்முடைய அன்றாட தேவைகளில் மின்சாரம் முதல் இடம் பிடித்துள்ளது. அதனால் தான் பல வழிகளிலும் மின்சாரத்தை உருவாக்க பல முயன்று கொண்டு இருக்கிறார்கள். அனல் மின்சாரம், அணுமின்சாரம், காற்றில் இருந்து, அலையில் இருந்து, நீரில் இருந்து, சூரிய ஒளியில் இருந்து கழிவுகளில் இருந்து இப்படி பல வழிகளில் மின்சாரம் தயாரிக்கப் பட்டிருக்க தற்பொழுது நீங்கள் நடந்தால் போதும், மின்சாரம் கிடைக்கும் என்று மின்சாரம் தயாரிக்கும் Tiles கண்டு பிடித்திருக்கிறார் லாரென்ஸ் என்ற ஆய்வாளர். அதிகமாக மக்கள் நடக்கும் சாலை பகுதிகளில் இந்த விஷயினை பதிக்கப்படும் எனவும், மக்கள் இந்த விஷயினை மேல் ஏறிப்போவதினால் உண்டாகும் இயக்க ஆற்றல் மின்சார ஆற்றலாக மாற்றப்படும் எனவும் இந்த கண்டு பிடிப்பை கண்டுபிடித்துள்ள ஆய்வாளர் சொல்லுகிறார்.


# உலகிலேயே மிகவும் தட்டையான கார்




உலகில் மிக வேகமாக செல்லும் கார், உலகின் நீளமாக கார், உலகின் மிகப்பெரிய கார் என எத்தனையோ விதமான கார்களை பார்த்திருப்போம். இவற்றையும் விட ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் கார் வந்திருக்கிறது. இந்தக்கார் தான் உலகில் மிகமிக தட்டையான கார் ஆகும். இந்தக் காரில் வழக்கம் போல் நாம் பயணம் செய்யமுடியும். இப்படி பயணம் செய்யும் காரைப் படத்தின் மூலம் காண்போம்.

# பிளாஸ்ரிக்கால் உருவாக்கப்பட்ட உலகின் முதல் விமானம்!

பிளாஸ்ரிக்கால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது விமானமானது தனது கன்னிப் பயணத்தை ஜப்பானின் டோக்கியோ நகரிலுள்ள நரிடா விமான நிலையத்திலிருந்து ஆரம்பித்தது. இந்த போயிங் ட்ரீம்லைனர் விமானமானது நிறை குறைந்தது என்பதால் ஏனைய விமானங்களை விட எரிபொருள் பயனுறுதிப்பாடுமிக்கதாகும். பெரிய ஜன்னல் கண்ணாடிகளையும் அகலமான ஆசனங்களையும் கொண்ட இந்த விமானம் ஏனைய விமானங்களுடன் ஒப்பிடுகையில் 60 சதவீதம் குறைவான சத்தத்தை மட்டுமே எழுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் டோக்கியோவிலிருந்து ஹொங்கொங்கிற்கு கன்னிப்பயணத்தை மேற்கொண்ட இந்த விமானத்தில் 200 விமான நிபுணர்களும் ஆர்வலர்களும் பயணித்தனர். மேற்படி விமானத்தின் நீளம் 186 அடியும் உயரம் 56 அடியும் இரு இறக்கைகளுக்கிடையேயான நீளம் 197 அடியும் ஆகும்.




# முகத்தில் பாரிய குழி விழுந்த அதிசய மனிதர்!



இம் மனிதனின் சத்திரசிகிச்சைக்குப் பின்பான தோற்றமே இது. இவருக்கு கண்கள் இருக்கும் ஒரு பக்கத்தில் பாரிய குழி ஒன்று காணப்படுகின்றது. இந்த குழி இவருக்கு ஆரம்பத்தில் கண்களுக்கு அருகில் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதும் கண் மற்றும் மூக்குப் பகுதிகள் நீக்கப்பட்டதன் காரணமாக தற்போது கண்களுக்கு பாரிய குழியாக தென்படுகிறது. பார்க்கவே நம்பமுடியாமல் இருக்கிறதல்லவா? ஆம் இது உண்மையில் இடம்பெற்ற சம்பவமே. உண்மையில் இவர் ஒரு அதிசய மனிதர்தான்.

# 700 வருடங்கள் பழமையான மம்மி பற்றிய மர்மத் தகவல்கள்..!

அமெரிக்காவில் உள்ள நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ள இற்றைக்கு 700 வருடங்கள் பழமையான மம்மி பற்றிய அரிய தகவல்களை ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். இம்மம்மி 50 வருடங்களுக்கு முன்னர் பெரு நாட்டிலிருந்து அமெரிக்க நூதனசாலைக்கு கொண்டுவரப்பட்டது. இந்த மம்மி 40வயதுடையது. இது 700வருடங்களுக்கு முன்னர் இறந்த பெண்மணியின் சற்று சிதைவடைந்த எலும்புக் கூடாகும். இப்பெண்மணி இறக்கும் போது கர்ப்பமுற்றிருந்ததாக புதைபொருள் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். இவரது உடலைப் பாதுகாப்பதற்கு எகிப்திய மம்மிகளைப் போன்று வாசனைத் திரவியங்களை உபயோகிக்காது இயற்கையான வளி, வெப்பம் என்பனவற்றை பயன்படுத்தி உள்ளனர். இந்த மம்மி பாதுகாப்பக்கப்பட்டிருப்பது பற்றிய ஆய்வினை நவீன தொழிற்ப வசதிகளுடன் மேற்கொள்ளப்பட்டதென தொல்பொருள் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வின் போது மம்மியின் எந்தவொரு உள்உடல் உறுப்புக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தூரத்தும் நீதிமன்றங்கள்



■எஸ்.சுரேந்திரஜித்

கடந்த சில மாதங்களாக சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே மத்தியிலுள்ள அரசு மீது நடத்தும் தார்மீக ஊழல் எதிர்ப்பு தாக்குதலுடன் இந்திய நீதிமன்றங்களும் சமீப காலமாக ஊழல் அரசியல் வாதிகளுக்கு கிடுக்கிப்பிடி போடத் தொடங்கியுள் ளன. இதனால் சராசரி ஊழல் இந்திய அரசியல் வாதிகள் செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்தடுத்து பலமாநிலங்களில் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் வரிசையாக சிறை க்கு அனுப்பப்பட்டுள்ளனர். இன்னும் சிலவற்றில் மத்திய அமைச்சராக இருந்தவரே உதாரணமாக தி.மு.கவின் ஆ.ராசா சிறைக்கு அனுப்பப்பட்டுள் ளார். அமைச்சர் பதவி வகிக்காத எம்.பிக்களான தி.மு.க தலைவர் மகள் கனிமொழி, காங்கிரஸ் எம்.பி.சுரேஷ் கல்மாடி போன்றோர் பல மாதங் களாக கம்பி எண்ணி வருகின்றனர்.

உத்தரப்பிரதேசத்தில் நீதிமன்றால் ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட 4 அமைச்சர்கள் தார்மீக அடிப்ப டையில் இதுவரை மாயாவதி அரசிலிருந்து நீக்கப் பட்டமை, கர்நாடகாவின் முதலமைச்சரே சிறை யிடப்பட்டமை என அரசியல்வாதிகளை நீதிமன் றங்கள் வேட்டையாடி வருகின்றன. தமிழக முதல் வர் ஜெயலலிதாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

1991- 96 வரை முதல்வராக இருந்தபோது வருமானத்துக்கு மிஞ்சிய சொத்து சேர்த்த வழக்கில் பெங் களூரில் நடக்கும் வழக்கில் பல சாக்குப் போக்குகள் சொல்லியும் அதை தடை செய்யாத உச்ச நீதிமன் றம் நேரில் சென்று ஆஜராகும்படி உத்தரவிட்டதையடுத்து கடந்த மாதம் ஜெயலலிதா நேரில் ஆஜராகி இருந்தார். அடுத்த தடவையும் அவரை வழக்கு விசாரணைக்கு வரும்படி பெங்களூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்றமாதம் ஆஜரானது போதாதா என கேள்வி எழுப்பி உச்சநீதி மன்றில் ஜெயலலிதா மனு செய்துள்ளார். இவ்வாறு முதல்வராக பதவி வகிப்பவரையே விசாரணைக்கு இழுத்து நீதிமன்றங்கள் இறுக்கமான நடவடிக்கை எடுத்துள்ளன. இது ஊடகங்களதும் பொதுமக்க ளதும் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுள்ளது. தி.மு.கவின் கனிமொழியை சிறை அனுப்பிய நீதித்துறையே இன்று ஜெயலலிதாவையும் விசார ணைக்கு வர கடுமையாக உத்தரவிட்டுள்ளது.

எனவே தி.மு.கவோ, அ.தி.மு.கவோ எவ ரானாலும் நீதித்துறை பட்சபாதகமாக நடப்பதாக குற்றஞ் சொல்லமுடியாது. இவ்வாறே கர்நாடக முதல்வர் எதியூரப்பாவும் சிறையிலுள்ளதுடன் அவரது அமைச்சர்கள் நால்வர் மீதும் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவர்களும் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம்.

நீதித் துறை மூலம் அமைச்சர்கள் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்டால் அதன் மீதியான நடவடிக் கையை இந்திய ஊடகங்கள் எடுத்துவிடும். உதா ரணமாக வெறுமனே ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டாலே போதும்; அந்தக் குற்றச் சாட்டை வைத்து தார்மீக ரீதியாக அந்த அமைச் சரோ அரசியல்வாதியோ பதவியிலிருந்து விலக வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுக்கத் தொடங்கிவிடும். எனவே வழக்கில் சாட்சிகள் இல்லாமையில் அந்த அமைச்சர் தண்டனையிலிருந்து தப்பினாலும் தார்மீக ரீதியாக பதவி விலகுவதான தண்டனையிலிருந்து தப்ப முடியாது.

இந்திய அரசியலில் முன்பு சுப்பிரமணிய சாமி வசித்த வகையிலான 'தாதா' வேலை செய்துவந்த வடமாநில அரசியல்வாதியான அமர்சிங்கும் இன்று நீதித்துறையால் சட்டப்படி பந்தாடப்பட்டு வருகிறார். அமர்சிங் என்பவர் சிறை செல்ல நேரி டும் என இந்தியர்கள் எவரும் கனவில் கூட நினைத் திருக்கமாட்டார்கள்.

அரசியல், வர்த்தகம் என இரண்டிலும் கொடி கட்டிப்பறந்த ஒருவரே அமர்சிங். இன்று அவர் ஊழல் குற்றத்தில் கம்பி எண்ண நேரிட்டுள்ளது. நீதி யும் நியாயமும் இன்று இந்திய தேசத்தில் பலரைக் கம்பி எண்ண வைத்துள்ளது. நீதியும் நியாயமும் இந் திய தேசத்தில் முக்கியமாக அதன் அரசியலில் நுழை ந்து சட்டப்படி விளையாடுவது நடுநிலையாளர் களை புளகாங்கிதமூட்டும் இனிய செய்தியாகும்.

கொலை, கற்பழிப்பு, கொள்ளை, கப்பம், கையூட்டு என பஞ்சமா பாதகங்களையும் துணிந்து செய்து வெளியே வெள்ள ஆடை அணிந்து அரசி யல் செய்யும் குண்டர்களுக்கு இனிமேல் கெட்ட காலமேதான்.

இந்தக் கருத்திலேயே ஊழல்களை ஒழிக்கும் சரியான தருணம் இது எனக் கடந்தவாரம் பிரதமர் மன்மோகன் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற நடவடிக் கைகளும் அன்னா ஹசாரே போன்ற சமூக ஆர் வலர்களின் குரலும் இணைந்து இந்திய ஜனநாயக த்தை சுத்திகரிக்கும் பணியினைச் செவ்வனே செய்து விடும் என்றே தோன்றுகிறது. இலங்கை போன்ற நாடுகளில் ஜனநாயகம் என்பது பருவத்துக்கும் கிடையாது. அதன் அண்மையிலுள்ள இந்தியாவின் ஜனநாயகம் நாளுக்கு நாள் புடமிடப்பட்டு மெருகேறி வருவது கவனிக்கத்தக்கது. இந்தி யாவின் இந்தப் போராட்டம் ஒரே நாளில் நல்வி ளைவைத் தரப்போவதில்லை. இந்த இலக்கை எட்ட இருபது ஆண்டுகட்கு மேலாகப் போராட வேண்டியிருக்கும் என்பதும் உண்மைதான். ஆனால் குறிப்பிடத்தக்க ஒரு விடயமானது இந்திய நீதித்துறை சரியான நிலையில் பயணிக்கத் தொடங்கி இருக்கிறது என்பதே.

ஊழல் அரசியல்வாதிகள் இனிமேலும் அரசியலில் இருப்பதா இல்லையா எனச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் பிரதிபலனாக குண்டர்கள், ரவுடிகள் மட்டுமே உள்ள சட்டசபைகளிலும் நாடாளுமன்றின் இரு அவைகளிலும் கல்விமான்கள், விஞ்ஞானிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் போன்றோர் அதிகமாக இடம்பெற வாய்ப்பு ஏற்படும். இந்திய மக்கள் சமூகமும் நீதித்துறையுமே இந்த எழுச்சியின் பிரதான பங்காளிகள் ஆவர். மக்கள் மனப்போக்கு ஊழல் வாதிகள் விடயத்தில் நேரெதிராகத் திரும்பும் என்பது சென்னை மாநகரில் தி.மு.க தொடர்ந்து பெறும் தோல்விகளால் ஊர்ஜிதமாக லாம். முன்பு தி.மு.கவின் பலமான கோட் டையாக கருதப்பட்ட சென்னை மாநகர் இன்று அ.தி.மு.க பக்கம் சாய்ந்து விட்டது. கிராமத்தில் பிறந்த கலைஞர் சென்னை நகரில் உள்ள ஒரு சட்டப்பேரவைத் தொகுதியில் வழக்கமாகப் போட்டியிட்டு வந்தார். இந்தமுறை மக்கள் கோபத்தை நாடி பிடித் அவர் திருவாரில் சென்று போட்டியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்டாலின்கூட சென்னைக்குள் மிகசிறிய வாக்கு வித்தியாசத்தில் தில்லுமுல்லுகள் செய்துதான் ஒருவாறு சட்டப்பேரவை ஆசனத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளனர். சென்னை நகரின் படித்த வாக்காளர் தி.மு.கவை அப்போ வென்று கைவிட ஊழல் குற்றமே தனிக்காரணிக்கும் விதிமுறைகளை மீறி வீதிகளைக்கூட ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட பலபெரும் புள்ளிகளின் கடைகளை இடிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் கடும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதை பொருட்படுத்தாது இழுத்தடித்த நகர நிர்வாகிகளையுமே நீதிமன்றம் ஒரு பிடி பிடித்துள்ளது. லஞ்சம் வாங்கிக் கொண்டு இந்த வியாபாரிகளை கண்டு கொள்ளாமல்விட்ட தி.மு.க ஆட்சியின் நிர்வாகிகள் மீது அடுத்த அம்பு பாயலாம். நீதிமன்றங்கள் விட்ட இடத்திலிருந்து எச்ச சொச்ச தாக்குதலை ஊடகங்கள் ஊழல் வாதிகள் மீது தொடுத்துவருகின்றன. மொத்தத்தில் பலமுனை தாக்குதலுக்கு இலக்கான ஊழல் இரசியல்வாதிகள் ஓடி ஒளிய இடம் தெரியாது திகைத்து நிற்கும் நிலையே ஏற்பட்டுள்ளது. முன்பு ஆளும் கட்சியாக பதவியில் இருக்கும்வரை ஊழல் அரசியல்வாதியை அசைக்கமுடியாது என்ற நிலையே இருந்துவந்தது. இப்போது அந்தப் பாதுகாப்பு கிடையாது என்றாகிவிட்டது. இது ஊழலுக்கு எதிரான போரில் இந்தியா மற்றொரு அடியை எடுத்து வைத்துவிட்டது என்பதையே காட்டுகிறது.


# YORK ST. JOHN UNIVERSITY - UK

Interviews for
2012 January Intake

York St John University www.yorksj.ac.uk

Study at York St. John University in the heart of the beautiful city of York. The best of both worlds-a blend of the modern and the traditional.

**Programmes Offered:**

- MA in Leadership & Management
- MA Global Marketing
- BA Business Management: Finance
- MA in International Business
- MA TESOL (Teaching English to Speakers of Other Languages)
- BA Business Management

International officer of York St. John University will be conducting interviews at Rivil Office

DATE : Tuesday, 08th November 2011 from 02.00 pm. to 06.00 pm.
Wednesday, 09th November 2011 from 10.00 am. to 02.00 pm.

VENUE : RIVIL OFFICE - NO. 443, 3rd Floor, Galle Road, Colombo - 03

*Please bring your original educational certificates & CV

INITIAL PAYMENT GBP 2500 & BALANCE IN TWO INSTALLMENTS

Benefits of Studying at York St John University in York

- Lower living cost & Hostel Facilities.
- Highest Satisfaction in academic studies & Friendly Staff.
- 20 hours work authorization per week for students during term time and full time during vacation.
- Full time work authority for dependent when main applicant is enrolled for a masters programme.

Visa Consultation & Guidance Absolutely Free of Charge

Contact for appointments - 11 4341888

RIVIL INTERNATIONAL EDUCATIONAL CONSULTANTS

443, 3rd Floor, Galle Road, Colpetty, Colombo-03 (Next to Colombo Jewellery Store)

E-mail : rivil@dialogsl.net Web : www.riviledu.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06.10.2011 – 12.11.2011**

# ராசி பலன்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

மகிழ்ச்சிகரமான வாரம். எடுக்கும் காரியங்களை திறம்பட செய்து முடிப்பீர்கள். பண வரவு நன்றாக இருக்கும். சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். எதிலும் நிதானம் தேவை. உறவினர்களை அனுசரித்துச் செல்லவும். குடும்பம் அமைதியாக நடக்கும். நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவரை அனுசரித்துச் செல்லவும். உறவினர்களிடம் எதையும் மனம் திறந்து பேச வேண்டாம். குழந்தைகள் நலனில் கவனம் செலுத்தவும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

குதூகலமான வாரம். எடுக்கும் காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மனம் உற்சாகமாக இருக்கும். சமுதாயத்தில் பெரியவர்களின் நட்பு கிடைக்கும். பண வரவு சீராக இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டாம். குடும்பம் மகிழ்ச்சிகரமாக நடக்கும். கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடத்தி மகிழக்கூடும். அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் தீரும்.

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நன்மையான வாரம். எடுக்கும் காரியங்கள் நல்லபடியாக முடியும். பொருளாதாரம் மேம்படும். உடல் நலம் நன்றாக இருக்கும். பூர்வீக சொத்துகளில் இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். ஆன்மீகத்தில் நாட்டம் செல்லும். குடும்பம் நன்றாக நடக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். கணவன் மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பெற்றோர்கள் உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. வேலை பளு அதிகரிக்கும். புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

நிம்மதியான வாரம். எடுக்கும் காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பண வரவுக்கு குறைவிருக்காது. வீண் செலவுகளை குறைத்துக் கொள்ளவும். உடல் நலனில் கவனம் தேவை. பெற்றோர் ஆதரவாக இருப்பார்கள். குடும்பம் சந்தோஷமாக நடக்கும். பண வரவுக்கு குறைவிருக்காது. உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழக்கூடும். விருந்துகளில் கலந்து கொள்ளக்கூடும். மனம் நிம்மதியாக இருக்கும்.

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

மிதமான வாரம். எடுக்கும் காரியங்களை எப்பாடுபட்டாவது வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். செலவுகள் அதிகரிக்கும். குடும்பம் நன்றாக நடக்கும். கணவரை அனுசரித்து செல்லவும். உறவினர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள். வடதிசையில் இருந்து கடிதம் மூலம் நல்ல செய்தி வந்து மகிழ்விக்கும். கொடுக்கும் வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள்.

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

வெற்றிகரமான வாரம். எடுக்கும் காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். பொருளாதாரம் மேம்படும். சொகுசு வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. குடும்பம் மகிழ்ச்சிகரமாக நடக்கும். வழக்குகள் சாதமாக முடியும். கடிதம் மூலம் நல்ல செய்தி வீடு தேடி வந்து மகிழ்விக்கும். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. வேலை பளு அதிகரிக்கும். வேலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

ஆனந்தமான வாரம். எடுக்கும் காரியங்களை உற்சாகமாக செய்து முடிப்பீர்கள். பண வரவு நன்றாக இருக்கும். சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உடல் நலம் மேம்படும். நண்பர்களுடன் இருந்து வந்த பிரச்சனைகள் தீரும். குடும்பம் குதூகலமாக நடக்கும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடத்தி மகிழ்வீர்கள். கணவருடன் அன்பாக இருப்பீர்கள். சிலருக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் கிடைத்து மகிழக்கூடும்.

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

அனுகூலமான வாரம். எடுக்கும் காரியங்கள் திருப்திகரமாக முடியும். பண வரவுக்கு குறைவிருக்காது. உறவினர்களும், நண்பர்களும் ஆதரவாக இருப்பார்கள். உடல் நலம் மேம்படும். யாருக்கும் கடன் வாங்கிக் கொடுக்கவோ, கையெழுத்திடவோ வேண்டாம். குடும்பம் சீராக நடக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழக்கூடும். கணவரை அனுசரித்துச் செல்வீர்கள். சுப நிகழ்ச்சிகள் நடத்த முயற்சி மேற்கொள்ளக்கூடும்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

திருப்திகரமான வாரம். எடுக்கும் காரியங்கள் நல்லபடியாக முடியும். வருமானம் அதிகரிக்கும். சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். மனம் உற்சாகமாக இருக்கும். தந்தை வழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். குடும்பம் நன்றாக நடக்கும். சுப நிகழ்ச்சிகள் நடத்த முயற்சி மேற்கொள்ளக்கூடும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். கணவரை அனுசரித்துச் செல்லவும். குழந்தைகள் நலனில் கவனம் செலுத்தவும். பண வரவு சீராக இருக்கும்.

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

சாதகமான வாரம். எடுக்கும் காரியங்கள் எளிதில் வெற்றிகரமாக முடியும். பொருளாதாரம் மேம்படும். வீண் செலவுகளை குறைத்துக் கொள்ளவும். யாருக்கும் வாக்கு கொடுக்கவோ, ஜாமீன் கையெழுத்திடவோ வேண்டாம். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பம் அமைதியாக நடக்கும். குடும்பத்தார் ஒற்றுமையாக இருப்பார்கள். குழந்தை இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைத்து மகிழக்கூடும். பண வரவு திருப்திகரமாக இருக்கும்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

ஆனந்தமான வாரம். எடுக்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். மனதில் புது தெம்பு பிறக்கும். உடல் நலம் நன்றாக இருக்கும். உறவினர்களை அனுசரித்துச் செல்லவும். அடுத்தவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. குடும்பம் நன்றாக நடக்கும். வருமானம் அதிகரிக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். நல்ல செய்தி வீடு தேடி வந்து மகிழ்விக்கும். நண்பர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உயர் அதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

உற்சாகமான வாரம். எடுக்கும் காரியங்கள் எளிதில் முடியும். நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தோடு சுற்றுலா சென்று வரக்கூடும். உடன் பிறப்புகளுடன் அன்பாக இருப்பீர்கள். பண வரவு நன்றாக இருக்கும். குடும்பம் சீராக நடக்கும். குழந்தைகள் நலனில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தார் ஒற்றுமையாக இருப்பார்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. கோரிக்கைகள் நிறைவேறும். பேச்சில் நிதானம் தேவை. சிலருக்கு விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைத்து மகிழக்கூடும். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும்.

ஒரு சிறு சோதனை

# உங்கள் மண வாழ்க்கை உறுதியானதா ?

பொதுவாக நாம் மோதிரத்தை நமது கையின் நான்காவது விரலில் அதாவது மோதிர விரலில் போட்டுக் கொள்கிறோம். திருமண நிச்சயதார்த்தம் அல்லது திருமணத்தின் போது மணமகனின் மோதிர விரலில்தான் மணமகள் மோதிரம் அணிவிக்கிறார்.

இவ்வாறு குறிப்பாக திருமண சடங்குகளின் போது நான்காவது விரலில் மோதிரம் அணிவிப்பதற்கு பின்னணியில் சுவாரஸ்யமான அதே நேரத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடிய கதை ஒன்று உண்டு.

இப்போது நமது கை விரல்களை எடுத்துக் கொள்வோம். முதல் விரலான கட்டை விரல் உங்கள் பெற்றோர்களை குறிக்கிறது. இரண்டாம் விரலான ஆட்காட்டி விரல் உங்களுடன் பிறந்த சகோதர, சகோதரிகளை குறிக்கிறது. மூன்றாம் விரலான நடு விரல் உங்களை குறிக்கிறது. நான்காம் விரலான மோதிர விரல் உங்கள்



இல்வாழ்க்கைத் துணையைக் குறிக்கிறது. ஐந்தாம் விரலான சுண்டு விரல் உங்கள் குழந்தைகளை குறிக்கிறது.

இப்போது உங்கள் இரண்டு கைகளையும் எடுத்து படத்தில் உள்ளவாறு வைத்துக் கொள்ளுங்கள்.

அதாவது ஒரு கையில் உள்ள நடு விரல் தவிர மற்ற எல்லா விரல்களையும் நீட்டி வைத்து அவ்வாறே மற்றொரு கையிலும் செய்து கொண்டு இப்போது இரண்டையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டி இருக்குமாறு வைத்துக் கொள்ளவும். நடு விரல் நீங்கள் என்பதால் அது இந்த விளையாட்டிற்கு ஒரு ஒப்புக்கு சப்பா. எனவே அந்த விரலை மடக்கி ஒட்டி வைத்துக் கொள்ளவும்.

அடுத்து ஒன்றுடன் ஒன்றாக ஒட்டி இருக்கும் உங்கள் கட்டை விரல்களை மட்டும் மெல்ல விலக்கவும். (கவனிக்க ; இவ்வாறு செய்யும் போது ஒட்டி இருக்கும் மற்ற விரல்களை பிரித்து விடக்கூடாது.) அவற்றை உங்களால் விலக்க அதாவது பிரிக்க முடியும். கட்டை விரல் என்பது உங்கள் பெற்றோர்கள். அவர்கள் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் அரவணைப்பாக இருப்பார்கள்.

அடுத்து ஆட்காட்டி விரல்கள் . இவற்றையும் அவ்வாறே விலக்க முடியும். ஏற்கனவே சொன்னவாறு ஆட்காட்டி விரல் என்பது உங்களுடன் பிறந்தவர்கள். இவர்கள் நாளாவட்டத்தில் தங்களுக்கென ஒரு குடும்பம் அமைத்துக் கொண்டு பிரிந்து விடுவார்கள்.

தொடர்ந்து வருவது நடு விரல்கள் . இவற்றை நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் இவை நீங்கள்.


இதை அடுத்து மோதிர விரல்கள் . இவற்றை பிரிப்பதற்கு முன் இதற்கு பிறகு வரும் சுண்டு விரல்களை பிரிக்க முடிகிறதா என்று பாருங்கள். இதையும் பிரிக்கலாம். அதாவது சுண்டு விரல் என்பது உங்கள் குழந்தைகள். இவர்கள் வளர்ந்து தங்களுக்கென கணவன்/ மனைவி என்று அமைத்துக் கொண்டு சென்று விடுவார்கள்.

இப்போது மோதிர விரல்களுக்கு வருவோம். ஒன்றுடன் ஒன்று ஒட்டி இருக்கும் மோதிர விரல்களை பிரிக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. ஏனென்றால் மோதிர விரல்கள் உங்கள் இல்வாழ்க்கை துணைவி/ துணைவரை குறிக்கின்றது.

இல்வாழ்க்கை பந்தம் பிரிந்து விடக்கூடாது. உறுதியானதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே திருமணத்தின் போது மோதிர விரலில் மோதிரம் அணிவிக்கப்படுகின்றது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சீனாவை மிரட்டும் இந்தியாவின் ஏவுகணை!

சீனாவைப் பற்றி சர்ச்சைக்குரிய செய்திகள் வெளியாகும்போது எல்லாம், பாகிஸ்தானைப் பற்றி ஏதாவது ஒரு தகவலைக் கசியவிட்டு, விஷயத்தை திசை திருப்புவது இந்தியாவுக்கு வாடிக்கை. அந்த வகையில் சமீபத்திய சர்ச்சை வெடித்தது செப்டம்பர் முதல் திகதி. காஷ்மீரில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதி மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் திடீர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதற்கு இந்தியா பதிலடி கொடுத்ததில் 5 பாகிஸ்தான் ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவல் முறியடிக்கப்பட்டது. நாளிதழ்களில் இதுதான் அன்றைய பிரதான செய்தி.

ஆனால், இந்த துப்பாக்கிகளின் முழக்கத்துக்குப் பின்னால், இந்தியாவின் பாதுகாப்பு குறித்த சர்ச்சைக்குரிய சம்பவம் ஒன்று அப்படியே அமுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கு மீண்டும் ஒரு மிரட்டலை ஏற்படுத்தியிருப்பது சாட்சாத் சீனத்துத் தோழர்கள்தான். ஆசியாவின் சுப்பர் பவர் யார்? என்ற போட்டியில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் கடும் போட்டி இருப்பது உண்மை. இந்தப் போட்டியை தூபம் போட்டு வளர்க்கும் வேலையில் அமெரிக்கா கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

சமீபத்தில் அந்தமான் கடலில் கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. பெருக்கு அது மீன்பிடிக் கப்பலாக இருந்தாலும், அதன் தொழில்நுட்பம் அசாத்தியமானது. ஒரு உளவுக் கப்பலுக்கே உரிய தொழிநுட்பத்துடன் அதி நவீன ரேடார்கள், டேட்டா சென்டர்களுடன் இந்த மீன்பிடிக் கப்பல் இருந்தது. அந்தமான் கடல் பகுதியில் இருந்தாலும், அதன் ரேடார்கள் குறிவைத்தத் திசை ஒரிசா மாநிலத்தின் விலர் தீவுதான். விலர் தீவைக் குறிவைத்து ரேடார்கள் தகவல்களை சேகரித்ததோடு, அந்தமான் கடல் பகுதியின் அதிகபட்ச அழுத்தம், அதில் எந்தவிதமான நீர் மூழ்கிக் கப்பல்களை இயக்க முடியும் என்பது உட்பட பல அறிநுட்பமான விவரங்களையும் அந்த மீன்பிடிக் கப்பல் சேகரித்ததாகக் கூறப்படுகிறது.



**இலங்கையில் ராணுவத் தளம் அமைக்கும் திட்டத்தை அமெரிக்கா கைவிட்ட நிலையில், அதை சீனா சிக்கெனப் பிடித்துக் கொண்டது. இதற்காக தனது நாட்டின் அதிநவீன ரோந்துப் படகுகள், போர் விமானங்களை இலங்கைக்கு சீனா வழங்கிவருகிறது. அதே நேரத்தில் இலங்கையில் கடற்படை தளம் அமைக்கும்போது, அதற்குத் தேவையான கருவிகள், உபகரணங்களைக் கொண்டு சேர்ப்பது, நீர் மூழ்கிக் கப்பல்களை இயக்குவது உட்பட முக்கிய தகவல்களை சீனா கடந்த 2005-ஆம் ஆண்டு முதல் சேகரித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**

இலங்கையில் சீனா கடற்படை அமைக்கும் நடவடிக்கை சமீபத்தியது என்றாலும், இதற்கான ஆய்வுகளை சீனா ரகசியமாக, பர்மாவைக் கொண்டு தொடங்கியது குறிப்பிடத்தக்கது. புத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு என்ற அடிப்படையில், இந்தியாவை விட பர்மாவுக்கு மிகவும் நெருங்கிய நாடு சீனா. அத்துடன் 'ஆங் சான் சூ கியியை' பர்மாவின் ராணுவ ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்தபோது, அதை இந்தியா எதிர்த்தது. ஆனால் சீனா ஆதரித்தது.

இதற்குக் காரணம் பர்மா, சீனா ஆகியவை கம்யூனிசத்தை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டு நாடுகளிலும் புத்தமதம் தான் அடிப்படையானது. மதம், அரசியல் ஆகிய இரண்டு அடிப்படைகளில் இணைந்த சீனா வும் பர்மாவும் பரஸ்பரம் ராணுவ ஒத்துழைப்பிலும் நெருங்கிவந்தன. இதன் வெளிப்பாடுதான் வங்காள விரிகுடா பகுதியில் சீனாவுக்காக பர்மா ரகசிய உளவு வேலைகளில் ஈடுபட்டு வந்தமை. இந்தியாவின் ஏவுகணை தொடர்பான தகவல்களை சேகரித்து சின்சியராக

இந்நிலையில் இலங்கையின் அதிப ராக பதவியேற்ற ராஜபக்ச சீனாவுக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டது, சீனாவுக்கு தெற்காசியாவில் கால் பதிப்பதற்கான ஒரு இடத்தை இலங் கையில் ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் காரணமாக பர்மாவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே இலங்கையில் தன் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் வேலை யில் சீனா இறங்கிவிட்டது.

சூப்பர் பவர் போட்டியில் இந்தியாவை மட்டம் தட்டுவதற்கு பர்மா, இலங்கை, பாகிஸ்தான் என்ற வலுவான வலையைப் பின்னினாலும், சீனாவின் ஒரே கவலை, இந்தியாவின் ஏவுகணை தொடர்பான திட்டங்கள்தான். எப்போது அக்னி ஏவுகணை என்ற ஒன்று ஏவப்பட்டதோ, அப்போதே சீனாவுக்குக் கவலை ஆரம்பமாகிவிட்டது.

இதனால், ஏவுகணை சோதனைகள் நடத்தப்படும் ஒரிசாவின் பத்திப்பூர் சரணாலயத்துக்கு அருகே உள்ள விலர் தீவை 24 மணி நேரமும் சீனா கண்காணிக்கத் தொடங்கிவிட்டது. செயற்கைக்கோள் மூலமாக மட்டுமல்ல, கப்பல்களில் நவீன ரேடார்கள் அமைத்து அவற்றின் மூலமும் தான்.

அக்னி ஒன்று ஏவுகணையில் தொடங்கி, பிருத்வி 1, 2 மற்றும் 3 ஏவுகணைகள், அக்னி 2, அக்னி 2ஏடி, அக்னி 3 டிடி, அக்னி 3ஏ, அக்னி 3பி, அக்னி 3சி மற்றும் அக்னி 3 எஸ்எல் ஆகிய ஏவுகணையின் வீச்சு பற்றிய கவலை சீனாவுக்கு அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

குறிப்பாக அக்னி வரிசை ஏவுகணைகள் சோதிப்பதற்கான இடம் மட்டுமல்ல, பிரம்மோஸ், பிருத்வ போன்ற மற்ற ஏவுகணைகளை சோதிக்கும் இடமாகவும் விலர் தீவு உள்ளது.

இதில் அக்னி 3 ஏவுகணை வரிசையில் வரும் சீரியல்கள் அதிக தூரம் பறந்து சென்று தாக்கும் தன்மை கொண்டவை. அக்னி 3ஏடி ஏவு கணை 4 ஆயிரம் கி.மீ தூரத்துக்கு ஆயிரத்து 500 கிலோ வெடி பொருளைக் கொண்டு சென்று தாக்கும். அக்னி 3டிடி ஏவுகணையோ 5 ஆயிரத்து 500 கி.மீ தூரத்துக்கு ஆயிரத்து 500 கிலோ வெடி மருந்துகளைக் கொண்டு சென்று இலக்கைத் தகர்க்கும். உச்சகட்டமாக, அக்னியின் கடைசி தயாரிப்பான அக்னி 3 எஸ்எல் ஏவுகணை, ஆயிரம் கி.கி வெடிபொருள் லோடுடன் 7 ஆயிரத்து 200 கி.மீ. தூரத்துக்கும், 700 கிலோ வெடி பொருளுடன் 11 ஆயிரத்து 500 கி.மீ. தூரத்துக்கும் பறந்து சென்று தாக்கும் திறன் கொண்டது என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஏவுகணை ஆராய்ச்சித் திட்டத்தின் வேகம் நாளுக்கு நாள் வேகம் பிடிப்பதால், சீனாவுக்கு உண்மையிலேயே பீதி ஏற்பட்டுள்ளது. ஆசியக் கண்டத்தைப் பொறுத்த வரை சீனாவிடம் மட்டுமே 10 ஆயிரம் கி.மீ தூரத்துக்கு பறந்து சென்று தாக்கும் ஏவுகணை இருந்தது என்ற நிலையில், இப்போது இந்தியா தயாரிக்கும் அக்னி 3 ஏவுகணை சீரியல்கள் சீனாவின் ஏவுகணைத் தொழில்நுட்பத்தை தொட்டுவிடும் தூரத்தில் இருப்பதால், சீனாவுக்குத் தூக்கம் தொலைந்துவிட்டது. அதனால் இந்தியக் கடல் எல்லைக்கு வெளியில் தனது உளவுக் கப்பலை மீன்பிடிக் கப்பலாக அடையாளம் காட்டி உளவு வேலையில் ஈடுபட்டுள்ளது.

நிலைமை இப்படி இருக்க, சீனாவைப் பற்றி சர்ச்சைக்குரிய செய்திகள் வெளிவரும் போது எல்லாம் அதை இந்திய மத்திய ஆட்சியாளர்கள் கடுமையாக மறுத்து வருகின்றனர். 'பிரம்ம புத்திராவில் சீனா அணைகட்டவில்லை' என்றார்கள். அதன் பின்னர் 'சீன அணையால் இந்தியாவுக்குப் பாதிப்பில்லை' என்றார்கள். ஆனால், சீன அணையால் இந்தியாவுக்கு ஆபத்து என்று செய்திகள் ஆதாரத்துடன் வெளியானதும், 'அணை குறித்து சீனாவுடன் பேசுவோம்' என்கிறார்கள். இந்தியாவை ஆட்சி செய்த, ஆளும் அரசாங்கங்களில் நமது இப்போதைய அரசைப் போல், உண்மையை மறைக்கும் அல்லது உண்மையை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் ஒரு அரசை மக்கள் பார்த்ததில்லை. அந்த வகையில் இந்தியாவின் ஏவுகணைத் தொழில்நுட்பத்தை வைத்தகண் வாங்காமல் உளவு பார்த்துக் கொண்டிருக்கும் சீனாவின் செயல்களையும் இந்தியா இப்போது மறுக்கத் தொடங்கியுள்ளது.

- ம.ஜ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■இரா.புத்திரசிகாமணி

# மாத சம்பளமும் நிவாரணங்களும் பகல் கனவுதானா?



சீரற்ற காலநிலை மலையக தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்வாதாரத்திற்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது. மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை, இடியுடன் கூடிய மின்னல், ஆங்காங்கே இடம் பெற்று வரும் மண்சரிவுகளினாலும் உயிர் ஆபத்துகளும் ஏற்பட இடமுண்டு.

தோட்டத் தொழிலாளர்கள் ஏனைய துறையினரைப் போன்று மாத சம்பளம் பெறுபவர்கள் அல்ல. அவர்கள் வேலை செய்யும் நாட்களுக்கு மட்டுமே சம்பளம் கணிப்பிடப்பட்டு வழங்கப்படுகின்றது. அடாதமழை விடாது பெய்தாலும் இவர்கள் வேலைக்கு சென்றால் மட்டுமே சம்பளம்.

இதனால் இந்த மலையகத் தொழிலாளர்கள் தமது உயிர்களையும் துச்சமாக மதித்து வேலைக்கு செல்கின்றனர். தேயிலை இறப்பர் தோட்டங்களில் விஷப்பாம்புகள், குளவிகளுடன் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளும் மழைக்காலங்களில் நிறையவே காணப்படும். போதிய சுகாதார சேவைகளும், ஆஸ்பத்திரிகளும் இல்லாததினால் உடனடியாக சிகிச்சை அளிக்கப்படாத நிலையில் பல உயிர் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன.



இவ்வளவு சவால்களுக்கு மத்தியில் இத்தொழிலாளர்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்திற்காகப் போராடுகின்றனர். இந்த மழைக்காலங்களில் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் மட்டுமே வேலைக்கு செல்ல முடிகின்றது. இதனால் அவர்களுடைய மாத வருமானத்திலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தேயிலைத் தோட்டங்களில் பெரிதாகப் பாதிப்பு ஏற்படாத போதும் இறப்பர் தோட்டங்களில் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மரங்களில் சேகரிக்கப்படும் இறப்பர் பாலுடன் மழைநீர் கலந்துவிடும் என்பதால் தோட்ட நிர்வாகங்களே வேலையை நிறுத்தி விடுகின்றன. தொடர்ச்சியாக மழை பெய்யும் போது மாதத்தில் ஒருநாள் கூட தொழில் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரைப் பட்டினியாகவும், கால் பட்டினியாகவும் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இங்கே ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிராமப்புற மற்றும் நெல் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மழைக்காலத்தில் வெள்ள நிவாரணம் என்றும், வெயில் காலங்களில் வரட்சி நிவாரணங்கள் என்றும் பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.

ஆனால் இலங்கை அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் தங்கியிருக்கும் தொகையை ஈட்டிக்கொடுக்கும் பெரும் பங்காற்றிவரும் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் இந்த வகையிலான எந்த ஒரு நிவாரணங்களும் வழங்கப் படுவதில்லை. இது ஏன்? மலையகத் தொழிலாளர்கள் வேண்டப்படாதவர்களா? அல்லது தீண்டத்தகாதவர்களா? இவர்களுக்கு மட்டும் ஏன் இந்த பாரபட்சம்.

இங்கு ஒன்றை கவனிக்க வேண்டும். மழையோ, வெயிலோ, எக்காலங்களிலும் இந்த தொழிலாளர்களை மேற்பார்வை செய்பவர்களும் எமது எழுதுவினைஞர்களும் தொழிற்சாலை அதிகாரிகளும், துரைமாரும் கனை கனையாகச் சம்பளம் பெறுகின்றனர். இவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை, இறப்பர் பொதிகளை ஏற்றி இறக்குபவர்களும் கூட மாத சம்பளம் பெறுகின்றனர்.



இந்த அப்பாவிகளான தோட்டத் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்டு அன்றாட உணவுக்கே பரிதவிக்கின்றனர். ஆனால் இவர்களுடைய சந்தாப்பணத்தில் சுகம் காணும் மலையக தொழிற்சங்கத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள மதிப்புகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவோ, அல்லது ஏனைய துறைசார் ஊழியர்களுக்கு கிடைப்பது போல் மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்கவோ முன்வருவதும் இல்லை. அதைப்பற்றி சிந்திப்பதும் இல்லை.

ஆனால், இந்த மலையகத் தலைவர்கள் தோட்டக் கம்பெனிகளிலும், முதலாளி மார்களினதும் அனுதாபிகளாகவே செயற்பட்டு வருகின்றனர். மாத சம்பளம் கிடைத்து விட்டால் அவர்கள் தமது தலைமைகளை உதறி விடுவார்கள், தொழிற்சங்கங்களின் பக்கமே போக மாட்டார்கள். இதனால் காலம் காலமாக இவர்கள் நடத்தி வரும் தொழிற்சங்க வியாபாரம் முடக்கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வே மாதச்சம்பளம் தொடர்பாக சிந்திக்க விடாமல் தடுத்து வருகின்றது என்பது தான் மறைக்க முடியாத உண்மை.

மக்கள் சேவை என்று கூறிக் கொண்டு தமது சுயஇலாபத்திற்காக தொழிற்சங்கங்களை நடத்திவரும் தொழிற்சங்கத் தலைவர்கள் தமது தனிப்பட்ட கருத்து, கொள்கை வேறுபாடுகளை மறந்து தொழிலாளர்களைப் பற்றி சிறிது சிந்திக்கவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களை காலம் காலமாக தினக் கூலிகள் என்ற அடைமொழிக்குள் அடைத்து வைக்காமல் அவர்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுப்பதைப் பற்றியும் முயற்சிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் மலையகத்தைச் சேர்ந்த ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம், இராஜதுரை, வி.இராதாகிருஷ்ணன், பி.திகாம்பரம், பிரபா கணேசன், யோகராஜன் என ஏழுபேர் இருக்கின்றனர். ஆறுமுகன் தொண்டமான் அமைச்சராகவும் முத்துசிவலிங்கம் பிரதி அமைச்சராகவும் கூட இருக்கின்றனர்.

இன்னும் சில வாரங்களில் ஜனாதிபதி தனது வரவு செலவுத்திட்ட உரையை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தவுள்ளார். அப்போது பொது மக்களுக்கு சாதகமான பல அறிவிப்புக்கள் வெளிவரலாம். சில நிவாரணங்களும் அறிவிக்கப்படலாம்.

எனவே இந்த மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே குழுவாக ஜனாதிபதியை சந்திக்க வேண்டும். வரவு செலவுத்திட்டத்தில் தொழிலாளர்களுக்கான நிவாரணங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க வேண்டும். நமது ஜனாதிபதியும் பிரித்து ஆள்வதில் கை தேர்ந்தவர். பல கட்சிகளையும் சேர்ந்த மலையக தலைமைகள் ஒரே அணியில் வரும் போது ஜனாதிபதியும் சிறிது சிந்திக்கத்தான் செய்வார்.

மலையகத் தலைமைகள் ஒன்றுபட்டு விட்டால் தேசிய பொருளாதாரத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள முடியும். இந்த சக்தியை இன்னும் மலையகத் தலைமைகள் உணரவில்லை. இப்பொழுது கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மாத சம்பளத்தையும் ஏனைய நிவாரணங்களையும் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். இவர்கள் முன்வருவார்களா அல்லது மாத சம்பளமும் நிவாரணங்களும் பகல் கனவுதானா?



UK EDUCATION FAIR
Organized by LOHOS GROUP
[Universities participating in the UK fair]
University of East London www.uel.ac.uk
University of Bedfordshire www.beds.ac.uk
Anglia Ruskin University www.anglia.ac.uk
University of West London www.uwl.ac.uk
Glyndwr University www.glyndwr.ac.uk
University of Wales, Newport www.newport.ac.uk
University of Worcester www.worc.ac.uk
SPOT ADMISSIONS FOR JANUARY AND SEPTEMBER 2012 INTAKES
POSTGRADUATE AND UNDERGRADUATE COURSES
MBA, Architecture, Civil, Electrical, Electronic Engineering, Computing, Bio Medical Sciences, Pharmacology, Nursing, Social Sciences, Business Management, Media, Art, Education, Research and PhD.
SCHOLARSHIPS AVAILABLE
DATE: Monday 21st November 2011
VENUE: GALLE FACE HOTEL - LOTUS "A" ROOM
TIME: 11.00AM TO 7.00PM
CONTACT : MR.LOHO - Lohos Group
Mobile:0777 917929 / Office:011 2577768
Tel: 0773498660
Email: lohosgroup@sltnet.lk Website: www.lohosgroup.com
Please visit the fair with your original certificates and a set of photocopies
ENTRANCE FREE




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காதல் இன்பமான துன்பமா?

## பித்தன் பதில்கள்

**அ.அரியதுரை,**
**கண்டி.**

**கேள்வி:** ஓரளவுக்கு வயதான பெண்களைப் பாட்டி என்றோ அம்மம்மா என்றோ அழைத்தால் அவர்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறதே? வேறு எப்படித் தான் அழைப்பதாம்?



**பதில்:** இது அன்ரி யுகம். நைன்ரியாய் இருந்தாலும் 'அன்ரி' என்று அழைத்தால் இந்தச் சிக்கலில் இருந்து தப்பித்துக் கொள்ளலாமே?

**எஸ்.டேவிட்,**
**கொட்டாஞ்சேனை.**

**கேள்வி:** இருவேறு இனத்தவர்களான பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் அதி புத்திசாலிகளாக இருப்பதாக எனது நண்பன் சொல்கிறான்?

**பதில்:** ஒட்டு மாங்கன்றின் பழம் வழமைக்குமாறாக தித்திப்புத் தரும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.

**செல்வி.ம.மலர்விழி,**
**வவுனியா.**



**கேள்வி:** காதல் வசப்படுவது ஒரு வகையில் இன்பமான துன்பம் என்கிறார்களே? இது சரியா பித்தரே?

**பதில்:** ஒரு தாய் தனது பிரசவத்தை இன்பமான துன்பம் எனக் கருதுவது போல, காதல் வசப்படுவதும் இன்பமான துன்பம் தான். ஆனால் சிலவேளைகளில் சிலருக்கு தனியே துன்பமாக அல்லது இன்பமாக மட்டுமே அமைந்து விடுவதுதான் பரிதாபம்.

**ப.பிரதீபன்,**
**நல்லூர்.**



**கேள்வி:** செய்யும் தொழிலில் வெற்றி பெற்றாலும் தோல்வி கண்டாலும் வருமானம் தரத்தக்க தொழிலேதும் உண்டா பித்தரே?

**பதில்:** ஏன் இல்லை? சட்டத்தரணி தான் அதாகும். வழக்கில் வெற்றி யடைந்தாலும் சரி, தோல்வி கண்டாலும் சரி கட்சிக்காரரிடம் தவறாமல் 'பீஸ்' கறந்து விடுகிறாரே?

**ப.பரஞ்சோதி,**
**பன்னார்.**

**கேள்வி:** திருமதி, திருவாட்டி இவற்றில் எது சரியானது பித்தரே?

**பதில்:** இரண்டுமே குடும்பத் தலைவி என்ற கருத்துக் கொண்டவைதாம்.

திருவை (கணவனை) மதிப்பவளைத் திருமதி என்றும், திருவை வாட்டி எடுப்பவளைத் திருவாட்டி என்றும் பொருள் கொண்டால் திருமதி என்பது எவ்வளவோ மேல்.

**ரீ.சுதாங்கி,**
**வேலணை.**

**கேள்வி:** கேள்விகளுக்கு நீர் கொடுக்கும் குதர்க்கமான பதிலை வாசித்து பெண்கள் பலர் உம்மீது ஆத்திரம் கொண்டுள்ளார்கள் என்பது உமக்குத் தெரியுமா?

**பதில்:** தெரியும்; ஆனால் கோபம் உள்ள இடத்தில்தான் குணமும் (அன்பும்) இருக்கும் என்ற முதுமொழியை நம்பித்தான் துணிச்சலோடு உலாவுகிறேன்.

**அ.மயில்வாகனம்,**
**பளை.**




**கேள்வி:** உங்களுக்கு கடவுள் இருக்குமிடம் தெரியுமா பித்தரே?

**பதில்:** அதைத் தேடி வேறெங்கும் அலையாதீர். உமது வீட்டில் குழந்தை இல்லையா?

**வே.செந்தூர்ச்செல்வி,**
**கோப்பாய்.**

**கேள்வி:** மனைவியை அதிகார மமதை மிக்கவராக விமர்சித்து அதன் மூலம் பிரபல்யம் தேட விழையும் ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?



**பதில்:** அடியேனின் (பித்தன்) தலைக்குத் தொப்பி சரியாகப் பொருந்தத்தக்கதாக கேள்வி கேட்கும் உமது புத்திசாலித்தனத்துக்குப் பாராட்டுக்கள்.

**ரி.அழகராசா,**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** பித்தரே விழிக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பென்ன?

**பதில்:** விழியில்லாத முகம் இருண்டது. மொழியில்லாத இனத்தின் நிலையும் அதுதான். ஆனால் மொழியால் பேச இயலாததை விழிபேசும். அது மௌனமொழி.

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 494

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | | 13 | | ■ |
| 14 | 15 | | ■ | 16 | | ■ | 17 |
| ■ | | ■ | 18 | | | 19 | |
| 20 | | 21 | | | ■ | 22 | |
| 23 | | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### மேலிருந்து கீழ்

01.விடாய் தீர்த்தல்.
02.சுருங்கி/ தீர்ந்து
03.அந்தரப்படுதல்.
04.சிரி
05.பல்லினால் வெளிப்படுத்தப்படும் சினக் குறிப்பு
06.மகன்/ இராசகுமாரன்
08.வறுமை/ மிடி.
10.விளக்கில் எரிவது.
13.கொடுக்கும்/ வழங்கும்.
15.ஒரு திசை.
17.கணவன்- மனைவி.
18.மாலை.
19.பசிய தன்மை.
20.ஒரே அளவான.
21.தாண்டு.

### இடமிருந்து வலம்

01.காலம் பிந்துவது
04.நிபுணத்துவமான செயல்/ நெற்றி
07.உபகரணம்.
08.பொருத்தமான
09.சக்திபவான் துணைவி.
11.ஒரு சாரியை உருபு.
12.நீர்பாட்டல்
14.பீதி அனுபவம்.
16.செல்வம்.
18.தொடக்கம்
20.சில்லு
22.நல்ல.
23.முடி.
24.நிசப்த நிலை

### சொற்சிலம்பம் போட்டி இல. 494

சொற்சிலம்பம் 494 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2011 ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 27 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டகுலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 491 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** திருமதி.எஸ்.ரெஜினோல்ட், இல.262.பதுளை வீதி, பண்டாரவளை.

**2 ஆம் பரிசு** த.ஹரேன், இல.10/3.பான்ஸ் மாவத்தை, கல்கிசை.

**3 ஆம் பரிசு** வி.செல்வநாயகம், சிவன் வீதி, புத்தூர்.

## சொற்சிலம்பம் போட்டி இல.491 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.தம்பதி 02.விமானம் 03.தினம் 04.தங்கம் 05.மகம் 06.தாம்பிக்கை 09.வடக்கு 12.ஆதி 13.விழு 14.நகும் 15.பாக்கு 16.மாகர் 18.கல 19.புவி.

### இடமிருந்து வலம்

01.தலைவிதி 04.தமது 07.பாபங்கம் 08.பவனம் 10.கம்பி 11.திடம் 12.ஆம் 13.வீதி 14.நகை 15.பாகுபாடு 17.பாகு 18.கராம்பு 20.குளிர்காலம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **சந்திராணி தங்கத்துரை,**
வட்ட விதானையார் வீதி, பெரிய நீலாவணை, 01A கல்முனை.

(2) **பா.மதுகரன்,**
பிரதான வீதி, தம்பிலுவில் 01.

(3) **எஸ்.வரதராஜன்,**
இல.25/3.மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

(4) **எஸ்.சின்னராசா,**
பிரதான வீதி, பெரிய போரதீவு.

(5) **சி.கிஸ்ணவேள்,**
வசந்தபவனம், மருதடி மேற்கு, சாவகச்சேரி.

(6) **திருமதி. ரஞ்சினி ஜெயரத்தினம்,**
இல.21,3/ 2 A 1வது சப்பல்லேன், வெள்ளவத்தை

(7) **கே.அரசேஸ்வரன்,**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்

(8) **ஸ்ரீநியான செபஸ்தியாம்பிள்ளை,**
இல.32. கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(9) **திருமதி.மு.பத்மராணி,**
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

(10) **பா.இராஜேஸ்வரி,**
இல.18/5, குடியிருப்பு, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு ஊரில் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்தப் பொருளைப் பார்த்தாலும் அதை, தான் அடைய வேண்டும் என்று நினைப்பான். எனவே, நாளடைவில் பார்த்தசாரதி என்ற அவனுடைய பெயர் மறைந்து பேராசைக்காரனாயிற்று.

ஒருநாள் வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான். வியாபாரம் முடிந்து, காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்த கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதை கிணற்றுக்குள் விட்டு தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து, ''யார் இங்கே தண்ணீர் எடுப்பது?'' என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், ''ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

''விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யாருடைய கண்ணுக்கும் தெரியமாட்டேன்!'' என்றது அந்தக் குரல்.




''மந்திரக் கிணறா? விரும்பியதை எல்லாம் தருமா?'' என்று வியப்புடன் கேட்டான் அவன்.

''உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு. உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்!'' என்றது அந்தக் குரல்.

'என்னதான் நடக்கிறது பார்ப்போமே' என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசைக் கிணற்றுக்குள் போட்டான்.

''விலையுயர்ந்த நகைகளாலும், பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்!'' என்றான் அவன். ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும், நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

''ஆ! ஏராளமான செல்வம் கிடைத்து விட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான்தான்!'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

''ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே! அவர்கள் இந்த நகைகளையும் பொற்காசு களையும் கைப்பற்றிக் கொள்வார்களே. என்ன செய்வது?' என்று சிந்தித்தான்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடமுள்ள இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

''வண்டியிலிருக்கும் நகைகளும், பொற்காசுகளும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக் கூடாது!'' என்று கேட்டான்.

''அப்படியே ஆகட்டும்!'' என்று குரல் கேட்டது.

வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும், பொற்காசுகளும் தெரியவில்லை. தன் அறிவுக் கூர்மையை மெச்சிக் கொண்டான் பேராசைக்காரன். மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்தான்.

விட்டுக்குள் ஓடினான். ''இனி நாங்கள் வறுமையில் வாட வேண்டியதில்லை. அரசனைப்போல செல்வச்செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலையுயர்ந்த பொருட்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்!'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்ன! வண்டியில் விலையுயர்ந்த பொருட் கள் இருப்பதாகச் சொன்னீர்களா? எந்தப் பொருட்களும் இல்லையே!'' என்றாள்.

அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும், நகைகளும் இருப்பது தெரிந்தது. மனைவியைப் பார்த்து, ''வண்டியை நன்றாகப் பார்!'' என்றான்.

''நன்றாகப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன்!'' என்றாள் மனைவி. அப்போதுதான் அவனுக்கு தான் கேட்ட இரண்டாவது வரம் எவ்வளவு தவறானது என்பது புரிந்தது. தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். கிடைத்த விலைமதிப்பற்ற பொருட்களைப் பயன்படுத்த முடியாத நிலையை எண்ணி வருத்தம் அடைந்த அவன், வண்டியை ஓட்டிக் கொண்டு மீண்டும் காட்டுக்குச் சென்றான். அந்த இடத்தில் மந்திரக் கிணறும் இல்லை; ஒன்றும் இல்லை. பைத்தியம் பிடித்தவனைப் போல் வண்டியை எட்டி உதைத்தான். அதிலிருந்து நகைகளும், பொருட்களும் கீழே கொட்டிச் சிதறின. என்ன பிரயோசனம்! அவை இவன் கண்களுக்கு மட்டும் தெரிந்தன. தன்னுடைய பேராசை குணத்திற்கு கிடைத்த பரிசு என நினைத்து மிகவும் வருந்தினான் பார்த்தசாரதி.

## கண்டுபிடியுங்கள் இப் படத்தில் மறைந்துள்ள பொருட்களை



## விடை காணுங்கள்

இந்தப் பூங்காவை உற்றுக் கவனியுங்கள் இதிலிருந்து சில கேள்விகள் தரப்படும். விடைகாணுங்கள்.

01. சுவிட்ச் எங்கே உள்ளது?
02. செம்மறி ஆடு எங்கே உள்ளது?
03. ரியூப் லைட் எங்கே?
04. மிளகாய் எங்கே உள்ளது?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அஜந்த மெண்டிஸ் முதலிடத்தைக்




சர்வதேச T20 கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கையின் அஜந்த மெண்டிஸ் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளார். சர்வதேச கிரிக்கெட் பேரவை இறுதியாக வெளியிட்ட தரப்படுத்தலில் அவர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். சர்வதேச T20 கிரிக்கெட் போட்டிகளின் துடுப்பாட்ட பட்டியலில் இங்கிலாந்தின் இயோர்ன் மோர்கன் முதலிடம் பெற்றுள்ளதோடு சகலதுறை ஆட்டக்காரர்களில் அவுஸ்திரேலியாவின் ஷேன் வொட்சனுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இதேவேளை, அணிகளுக்கான தரவரிசையில் இலங்கை இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

# பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமது ஆசிப் மீதான சூதாட்ட புகார் நிரூபணமானது



இவர்கள் லஞ்சம் பெற்றது விசாரணையில் அம்பலமானது. இது, கிரிக்கெட் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக, லார்ட்சில் நடந்த டெஸ்டில் (ஓகஸ்ட், 2010), பாகிஸ்தான் அணியின் அப்போதைய கேப்டன் சல்மான் பட், 27, வேகப் பந்து வீச்சாளர்கள் முகமது ஆசிப், 28, முகமது அமிர் 19, ஆகியோர் ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டனர். இதை 'தி நியூஸ் ஆப் தி வேர்ல்ட்' என்ற பத்திரிகை, தனது புலனாய்வு மூலம் நிரூபித்தது.

**ஐ.சி.சி.. தடை:**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) சார்பில், சல்மான் பட் (10 ஆண்டுகள்), முகமது ஆசிப் (7 ஆண்டுகள்), முகமது ஆமிர் (5 ஆண்டுகள்) ஆகியோர், சர்வதேச போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

**ஆமிர் ஒப்புதல்:**

இந்த மூன்று வீரர்கள் மீதும் சதி செய்து ஏமாற்றுதல், லஞ்சப்பணம் பெறுதல், போன்ற பிரிவுகளில், லண்டனில் உள்ள சவுத் வொர்க் கிரவுன்' கோர்ட்டில், வழக்கு தொடரப்பட்டது. இதில், முகமது ஆமிர் தனது குற்றத்தை ஒத்துக் கொண்டதால் இவரிடம் விசாரணை நடக்கவில்லை.

**எதிரான ஆதாரங்கள்:**

ஆனால் மற்ற இருவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தனர். இருப்பினும், சல்மான் பட்-சூதாட்ட ஏஜென்ட் மசார் மஜீத் இடையிலான எஸ்.எம்.எஸ்., தகவல்கள், உரையாடல்கள், உட்பட 13 ஆதாரங்கள் இவர்களுக்கு எதிராக அமைந்தன. இதில் 19 நாட்களாக விசாரணை நடந்தது. முடிவில் 12 பேர் கொண்ட குழு, 16 மணி நேரம், 50 நிமிடங்கள் விவாதித்தது. 20 வது நாளில் 10-2 என்ற பெரும்பான்மை அளவில், ஒருமனதாக தீர்ப்பை வாசித்தனர்.

**இருவர் குற்றவாளி:**


இதில் சல்மான் பட் மீது இரு பிரிவுகளிலும், முகமது ஆசிப் மீது ஒரு பிரிவிலும் குற்றம் நிரூபிக்கப்பட்டது. இவர்கள் குற்றம் செய்தது உறுதியானது. முகமது ஆசிப் மீதான லஞ்சப் பணம் பெறுதல் குற்றச்சாட்டு குறித்து இன்னும் உறுதியான முடிவுக்கு வரவில்லை. தீர்ப்பு வாசிக்கப்பட்ட போது இருவரும் உணர்ச்சியற்ற நிலையில், அமைதியாக இருந்தனர்.

இவர்களுக்குரிய தண்டனை விவரம், இந்த வாரத்தில் வெளியாகும். அதுவரை இருவரையும் ஜாமீனில் விட நீதிபதி குக்கே உத்தரவிட்டார்.

**7 ஆண்டு ஜெயில்**

சல்மான் பட், முகமது ஆசிப் இருவரும் கிரிக்கெட் விளையாட்டு உலகில் சூதாட்டம் மற்றும் ஊழல் செய்து பிடிபட்டு, முதன் முதலாக ஜெயிலுக்கு செல்ல உள்ளனர். இதில் சல்மான் பட் மீது இருபிரிவுகளில் குற்றம் காட்டப்பட்டதால், ஏழு ஆண்டு தண்டனை கிடைக்கும். முகமது ஆசிப்பிற்கு இரு ஆண்டுகள் கிடைக்கும். தவிர, 1960ல் இருந்து செயல்பட்டு வரும் லண்டன் சவுத்வொர்க் கிரவுன் கோர்ட்டில், முதன் முதலாக ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் இவர்கள் தான். ★

# தாய்லாந்து வெள்ளத்தால் ஹார்ட் டிஸ்க் விலை எகிறியது



தாய்லாந்து வெள்ளத்தில் பாங்கொக் நகரமே மிதக்கிறது. அங்குள்ள சீகேட் உட்பட கம்ப்யூட்டர் ஹார்ட் டிஸ்க் டிரைவ் தயாரிப்பு நிறுவனங்களில் உற்பத்தி முடங்கியது. குறிப்பாக தொழிற்சாலைகள் வெள்ளம் சூழ்ந்து போனதால் நாசமாகின. இதனால், சப்ளை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தியா உட்பட பல நாடுகளில் ஹார்ட் டிஸ்க் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. சென்னையில் கம்ப்யூட்டர் ஹார்ட்வேர் மற்றும் உதிரி பாகங்கள் மொத்த விலையில் கிடைக்கும் ரிச்சி தெருவில் கடந்த வாரம் ரூ.2,300க்கு விற்ற சீகேட் ஹார்ட் டிஸ்க், இப்போது ரூ.4,600 ஆக உயர்ந்துள்ளது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் விலை எகிறியுள்ளது. வெள்ளப் பாதிப்பால் ஹார்ட் டிஸ்க் தயாரிப்பு நிறுவனங்கள் இந்த நிதி ஆண்டில் கடும் நஷ்டத்தை சந்திக்கும்.

# கண்களை பாதுகாக்க Software ?



நம்முடைய கணனியைக் காப்பாற்ற antivirus, firewall போன்ற பலவற்றை பயன்படுத்துகிறோம். ஆனால் நம் உடல் நலனை பாதுகாப்பதை பலர் மறந்துவிடுகிறோம். அதிக நேரம் கணனி முன் வேலை செய்பவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் இது மிகவும் பயன்படும். இரவு நேரங்களில் அதிகம் கணனியில் பணிபுரிபவர்கள் எனில் உங்கள் கண்கள் சோர்வடைவதை உணர்ந்திருப்பீர்கள். பகல் நேரங்களில் உங்கள் மொனிட்டர் திரை நன்கு பிரகாசமாக தெரியும். அவை பகல் வெளிச்சத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இரவில் அதிக வெளிச்சம் நம் கண்களுக்கு எரிச்சலூட்டும். நம் மொனிட்டரின் வெளிச்சத்தை பகலிலும் இரவிலும் அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கமுடியாது. எனவே இந்த மென்பொருள் உங்களுக்கு உதவும். இது காலையிலே பகலிலும், இரவிலும் உங்கள் இடத்தின் வெளிச்சத்திற்கும், நேரத்திற்கும் ஏற்றவாறு உங்கள் மொனிட்டரின் வெளிச்சத்தை மாற்றும். இதனை தரவிறக்கியதுடன் உங்கள் கணனியில் நிறுவி கொள்ளுங்கள். பிறகு Change Settings சென்று

1. ADJUST YOUR LIGHTING FOR DAY AND NIGHT: உங்களுக்கு வேண்டியவாறு பகலிலும் இரவிலும் எவ்வளவு வெளிச்சம் வேண்டும் என்பதை தேர்வு செய்யுங்கள்.

2. SET YOUR LOCATION: இதில் சென்று Change அழுத்தினால் where am i? என்று தோன்றும். windows _ locate என்பதை கிளிக் செய்து வரும் map ல் உங்கள் இருப்பிடத்தினை தேடி latitude and longitude யை copy செய்து அதில் தரவும்.

3. TRANSITION SPEED: திடீர் என்று மொனிட்டரின் வெளிச்சம் அதிகரிப்பதோ, குறைவதோ நம் கண்களுக்கு ஒவ்வாது. ஆகவே வெளிச்சம் மாறும் வேகத்தை உங்களுக்கு ஏற்றவாறு தேர்வு செய்யுங்கள். இது முற்றிலும் இலவசமானது. linux மற்றும் mac பதிப்புகளும் உள்ளன. Download செய்ய http://stereopsis.com/flux/ தளத்திற்கு செல்லவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இத்தாலியின் மிலன் நகரில் ஏராளமான மரம், செடிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டு வருகிறது. ஸ்டெபனோ போரி என்ற ஆர்க்கிடெக் தலைமையில் போரி ஸ்டுடியோஸ் நிறுவனம் இதை அமைத்து வருகிறது. 27 மாடிகளுடன் கூடிய அடுக்குமாடி, அருகிலேயே அதைவிட சற்று சிறியதாக இன்னொரு அடுக்குமாடி. அனைத்து தளங்களிலும் மரம், செடி, கொடி கள் அமைக்கப்படுகின்றன. மொத்தம் 730 மரங்கள், 11 ஆயிரம் செடிகள், 5 ஆயிரம் புதர் மற்றும் குரோட்டன்ஸ் வகைகள் இதில் அமைக்கப்படுகின்றன. அதாவது, ஏறக்குறைய ஒரு ஹெக்டேர் பரப்பில் வளரும் அளவுக்கான தாவரங்கள். வானுயர அமைக்கப்படும் காடு என்று பொருள் படும் வகையில் பாஸ்கோ வெர்ட்டிகல் என்று அபார்ட்மென்டுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள்.

இதுபற்றி போரி நிறுவனத்தின் இயக்குனர் மிகேல் பிரனலோ கூறியதாவது: தரையில் வீடு கட்ட வசதி இல்லாத சூழலில்தான் மாடிகள் கட்டும் எண்ணம் உதித்தது. குடியிருப்புக்காகத்தான் மாடிகள் கட்ட வேண்டுமா? மரம், செடிகள் நடுவதற்கு மாடி கட்டக்கூடாதா என்ற எண்ணத்தின் வெளிப்பாடுதான் இந்த பாஸ்கோ வெர்ட்டிகல் அபார்ட்மென்ட். மரம், செடி, கொடிகளை பார்க்கும் போதே மனதுக்கு நிம்மதியும் அமைதியும் கிடைக்கும். சூரிய வெப்பம், மாசு பாதிப்பு ஆகியவற்றில் இருந்து நம்மை காப்பவை தாவரங்கள்தான்.













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org